கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௨.] பிரமாதீச ௵ மாசி ௴ [பகுதி-௪.
Vol. XII. February—March. 1914. No. 4.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY. MADRAS. NOV 1919

## சாணக்கிய நீதிவெண்பா.

———:(o):———

(௧௦௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஶ்லோகம்.

𑌅𑌤𑌿𑌦𑌰𑍍𑌪𑍇 𑌹𑌤𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌅𑌤𑌿𑌮𑌾𑌨𑍇 𑌚 𑌕𑍌𑌰𑌵𑌾𑌃 ।
𑌅𑌤𑌿𑌦𑌾𑌨𑍇 𑌬𑌲𑌿𑌰𑍍𑌬𑌦𑍍𑌧𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤 𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

வெண்பா.

மிக்கசெருக் காலிலங்கை வீந்ததே மாவலியும்
மிக்ககொடை யாலரசு விட்டிழந்தான்—மிக்கபெரு
மானத்தாற் கௌரவரு மாண்டா ரளவுகடந்
தானசெய றீங்கென் றறை.

———

ஶ்லோகம்.

𑌭𑍋𑌜𑍍𑌯𑌂 𑌭𑍋𑌜𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌰𑌤𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌵𑌿𑌭𑌵𑍋𑌦𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌨𑌾𑌲𑍍𑌪𑌸𑍍𑌯 𑌤𑌪𑌸𑌃 𑌫𑌲𑌮𑍍 ॥

வெண்பா.

உண்ணும் பொருளு முணவுபெறு மெய்ச்சுகமும்
எண்ணும் பெருந்தனமு மீந்துவக்குந்—திண்ணிலையும்
பெற்றொருவன் கொள்ளப் பெருமா தவம்வேண்டும்
அற்பதவத் தாகுவன வன்று.

———

ஶ்லோகம்.

புத்ரப்ரயோஜனா தாரா: புத்ர: பிண்டப்ரயோஜன: ।
ஹிதப்ரயோஜனம் மித்ரம் தனம் ஸர்வப்ரயோஜனம் ॥

வெண்பா.

இல்லா ளரும்பே றிருப்புதல்வ ரப்புதல்வர்
நல்குவது பிண்டமெனு நற்பேறு—செல்வந்
தரும்பேறு பற்பலவே தன்னுடைய நண்பன்
றரும்பே றினியதெனச் சாற்று.

---

ஶ்லோகம்.

உத்தமம் ப்ராக்ருதம் வாக்யம் உத்தம: க்ஷேத்ரஸம்பவ: ।
உத்தமா ஸத்யஶீலா பார்யா உத்தம: ஸ்வஜனப்ரிய: ॥

வெண்பா.

ஒத்தொழுகு மில்லவளு முள்ளுவகை சேர்கிளையுஞ்
சத்தியமும் வேண்டுவன தந்துதவும்—புத்திரனும்
பெற்றுக் கொளலரிது பெற்றாற் பெறுஞ்சுகங்கள்
முற்றுமுள வென்றே மொழி.

---

ஶ்லோகம்.

ஶைலே ஶைலே ந மாணிக்யம் மௌக்திகம் ந கஜே கஜே ।
ஸாதவோ ந ஹி ஸர்வத்ர சந்தனம் ந வனே வனே ॥

வெண்பா.

மன்னுமலை தோறுமிலை மாணிக்கஞ் சந்தனமுந்
துன்னு மடவியிடந் தோறுமிலை—மின்னுமுத்துஞ்
சொல்லானைக் கொம்பினடி தோறுமிலை நல்லோனும்
எல்லா விடங்களினு மில்.

---

## ஶ்லோகம்.

𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌧𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋𑌽𑌶𑍋𑌚𑍍𑌯𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃।
𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾 𑌵𑌿𑌧𑌵𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾॥

## வெண்பா.

வந்துணர்வு பெற்ற வறியவனும் கற்றவனைப்
பந்துவெனக் கொண்டவனும் பாலகரைத்—தந்துசுகஞ்
சேரு மமங்கலியுந் தீய துயரடையார்
சாருவரே யுண்மகிழ்ச்சி தாம்.

---

## ஶ்லோகம்.

𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌶𑍋𑌚𑍍𑌯𑌃 𑌶𑍋𑌚𑍍𑌯𑌂 𑌮𑍈𑌥𑍁𑌨𑌮𑌪𑍍𑌰𑌜𑌮𑍍।
𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌃 𑌶𑍋𑌚𑍍𑌯𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌰𑌾𑌜𑌕𑌮𑍍॥

## வெண்பா.

நல்லறிவில் லாதவற்கும் நற்கலைகல் லாதவற்கும்
நல்லரசன் காவலிலா நாட்டவர்க்கும்—சொல்லினிய
மக்கட்பே றில்லாத மாந்தருக்கு மின்பமில்லைத்
துக்கப்பே றுண்டெனவே சொல்.

---

## ஶ்லோகம்.

𑌕𑍁𑌲𑍀𑌨𑍈𑌃 𑌸𑌹 𑌸𑌮𑍍𑌪𑌰𑍍𑌕𑌂 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍈𑌃 𑌸𑌹 𑌮𑌿𑌤𑍍𑌰𑌤𑌾𑌮𑍍।
𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌸𑌮𑌂 𑌮𑍇𑌲𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿॥

## வெண்பா.

மேதையர்க்கு மித்திரனு மேற்குலத்து வந்தவன்பாற்
பேதமிலாத் தொடர்ச்சி பெற்றவனும்—ஞாதியர்பால்
ஒன்றிக் கலந்துசெறி வுற்றவனுந் தீங்குறுதல்
என்றுமிலை யென்றே யியம்பு.

---

### ஶ்லோகம்.

கஷ்டா வ்ருத்தி: பராதீநா கஷ்டோ வாஸோ நிராஶ்ரய: ।
நிர்தநோ வ்யவஸாயஶ்ச ஸர்வகஷ்டா தரித்ரதா ॥

### வெண்பா.

யாதெனினுங் கைப்பொருடா னில்லாத வாணிகமுந்
தீதமரு நீசன்கீழ்ச் சேவனமும் — ஆதரவொன்
றில்லா நிலையு மிலம்பாடு மென்றிவைகள்
எல்லாந் துயரென் றியம்பு.

---

### ஶ்லோகம்.

தஸ்கரஸ்ய குதோ தர்ம: துர்ஜநஸ்ய குத: க்ஷமா ।
வேஶ்யாநாம் குத: ஸ்நேஹ: குத: ஸத்யஞ்ச காமிநாம் ॥

### வெண்பா.

சோரன்பாற் புண்ணியமுந் துர்ச்சனன்பால் வான்பொறையும்
சாரமிலாக் காமுகன்பாற் சத்தியமும் — வாரமெலாம்
செப்பும் பொதுமகள்பாற் சிந்தை யிடைநட்பும்
எப்படியு முண்டாவ தில்.

---

### ஶ்லோகம்.

ஸேவகஸ்ய குதோ மாந: கோபநஸ்ய குத: ஸுகம் ।
ஸ்த்ரீணாம் குத: ஸதீத்வஞ்ச குதோ மைத்ரீ வஞ்சகஸ்ய ॥

### வெண்பா.

சேவகர்க்கு மானமில்லைத் தீயவர்க்கு நட்பில்லை
பாவையர்க்குக் கற்பும் பகரினிலை — ஆர்வமறக்
கன்றுசினங் கொண்டவற்குக் காணுஞ் சுகமில்லை
என்றுரைத்தார் மேலோ ரெடுத்து.

---

### ஶ்லோகம்.

𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌸𑍍𑌯𑌬𑌲𑌂𑌰𑌾𑌜𑌾 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌰𑍋𑌦𑌿𑌤𑌂 𑌬𑌲𑌂 ।
𑌬𑌲𑌂𑌮𑍂𑌰𑍍𑌖𑌸𑍍𑌯𑌮𑍌𑌨𑌿𑌤𑍍𑌵𑌂 𑌚𑍌𑌰𑌾𑌣𑌾𑌮𑌨𑍃𑌤𑌂𑌬𑌲𑌂 ॥

### வெண்பா.

வன்மை யிலார்க்குவலி மன்னவனே கள்வருக்குத்
துன்னுவலி பொய்வார்த்தை சொல்லுதலே—புன்மையுறும்
மூடன் றனக்குவலி மோனமே யென்றுரைத்தார்
தேடு மறிவுள்ளோர் தெளிந்து.

---

### ஶ்லோகம்.

𑌯𑍋𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌣𑌿𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌅𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌪𑌰𑌿𑌷𑍇𑌵𑌤𑍇 ।
𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌣𑌿𑌤𑌸𑍍𑌯𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌅𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌨𑌷𑍍𑌟𑌮𑍇𑌵𑌚 ॥

### வெண்பா.

நிலையான மெய்ப்பொருளை நீத்தகற்றி வேறு
நிலையாப் பொருடேடி நிற்போன்—நிலையான
மெய்ப்பொருளுங் கைவிடுவன் வேண்டு நிலையில்லா
அப்பொருளுங் கைவிடுவ னாங்கு.

---

### ஶ்லோகம்.

𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌂𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌲𑍍𑌪𑌂𑌵𑌾 𑌯𑍋𑌨𑌰𑌃 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑌯𑌤𑍍𑌨𑍇𑌨𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌸𑌿𑌂𑌹𑌾𑌦𑍇𑌕𑌂𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

### வெண்பா.

செய்யுந் தொழிலெவையுந் திண்மை பெறமுயற்சி
செய்து நலமடையுஞ் சிங்கம்போல்—வையகத்திற்
செய்யுந் தொழிலைச் சிறிதுபெரி தென்னாது
செய்க முழுமுயற்சி சேர்ந்து.

---

ஶ்லோகா

ஸர்வேந்த்ரியாணி ஸம்யம்ய பகவத் பதிதோ ஜந: ।
காலதேஶோபபந்நாநி ஸர்வகார்யாணி ஸாதயேத் ॥

வெண்பா.

மீனம் வருமளவு மெய்யொடுக்கி நீர்க்கரையின்
மோனமுறுங் கொக்கின் முயற்சியெனத்—தானிருந்து
காலமிடம் வாய்த்திடுதல் கண்டு வினைபுரிக
சாலு முழுமுயற்சி சார்ந்து.

---

ஶ்லோகா

வஹ்வாஶீ ஸ்வல்பஸந்துஷ்ட: ஸுநித்ர: ஶீக்ரசேதந: ।
ப்ரபுபக்தஶ்ச ஶூரஶ்ச ஜ்ஞாதவ்யா: ஷட் ஶுநோ குணா: ॥

வெண்பா.

பேராசை யற்பம் பெறினும் பெருமகிழ்ச்சி
போராத வீரம் பிரபுபக்தி—சோராமை
உற்றதுயில் வல்லே யுணர்ந்தெழுகை நாயினிடங்
கற்கத் தகுங்குணங்கள் காண்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

---

ஸ்ரீ

# புரஞ்சனோபாக்யானம்.

பூவினுள் தாமரைபோலப் பூவினுட் பொலிவுற்றோங்கும் இப் பரதகண்டத்தில் பூர்வம் பிராசீனபர்ஹி என்பானொரு புரவலனிருந் தனன். அவன் கேவலகரும்நிட்டனாய்த் தீவேள்விவேட்டல் முதலிய தீவினைகளை நயந்துசெய்து, சிந்தைமகிழ்வெய்தி, தினங்களைக்கழித்து வந்தான். அவனுக்கு வினைசெயற்கண் வெறுப்பும், வீடுபேற்றில் விருப்பும் தோன்றுமாறு தத்துவஞானத்தையுணர்த்தத் திருவுள ளங்கொண்டு ஸ்ரீநாரதமாமுனிவர் ஒருகால் அவ்வரசனிடம் எய்தி னர். அவர் அன்பால் தன்பால்வரலுணர்ந்த அரசன், மலர்க்கடவு ளதுவரவுகண்டவாசவன்போல, அவர்முன்னர்ச்சென்று, அடியற்ற மரம்போல எட்டுறுப்பும் நிலந்தோயவீழ்ந்து அவரடிமலரைத் தன் முடிமிசையணிந்து, அழைத்துவந்து மணித்தவிசிட்டு, அருக்கிய முதலிய அமைத்து, அவரது கமலச்சரணை அருத்தியொடு அருச் சனைபுரிந்து, சிரத்திற்குவித்தகரத்தனாய், முனிவரரைநோக்கி மொழி கின்றான்.

"சித்துணர்ந்த தெய்வமுனிவீர்! தேவரீர் அடியேனைப் பொருள் செய்து இவ்வயினெழுந்தருளியது அடியேன்செய்த புண்ணியமோ? அடியேனதுகுலஞ்செய்த நற்றவமோ? இந்நிலஞ்செய்த பூசனையோ? தேவரீரது பாததூளிபடுதற்கு இவ்வுலகம் பாக்கியஞ்செய்தது. தேவரீர் ஈண்டெழுந்தருளப்பெற்றேன்; அடியேன் பிறவிப்பெரும் பிணிகளற்றேன். அடிகள் எழுந்தருளியசெய்தியையறிய வேணவா வுடையே"னென வேண்டாநிற்கும் வேந்தனை முனிவர்பிரான் இருக் கப்பணித்து இயம்புவாராயினர்.

"ஓ! அரசனே! நீசெய்துவருங்கருமத்தினால் யாதுநலம்பெற விரும்புகின்றாய்? இக்கருமமடியாகவருவது துன்பமேயன்றி இன்ப மேயன்று. நீபுரியும்வினைகள் நல்லனபோலத்தோன்றினும், அவை இறுதியில் தீவினைப்பயனையே நுகர்விக்கும். ஜீவன் பாவகன்மங்களை யியற்றி, யாதனாசரீரத்தையெடுத்து, நிரயத்திற் பலதுன்பங்களை யடைந்து துக்கிக்கின்றான். புண்ணியகருமங்களைப்புரிந்து, தேவ

சரீரம்பெற்றுத் துறக்கத்தில் இன்பந்துய்க்கின்றான். இச்சுவர்க்காதி லோகசுகங்களோ நிலையுள்ளனவல்ல. சின்னாளிருந்து பின்னலழிவனவாம். இவன்செய்துவைத்தநல்வினை யெத்துணை அத்துணை இன்பந்துய்த்து, அதுமுடிந்தவாறே, மீண்டும் உலகிடைத் தோன்றுகின்றான். உத்தமமாய் நித்தமுமான பேரின்பப்பேற்றையிழந்து, அநித்தமும் அற்பமுமான சிற்றின்பங்களை நயந்து, கருமமியற்றி, அந்தோ! உயிர்கள் உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்தும் உழன்றுவாடுவதே!" என முனிவர் உள்ளுருகக்கூறக்கேட்டு, அரசன் அத்தெய்வமுனிவரது திருமுகம்நோக்கி, "ஓ! ஸற்குருவே! என் மனம் இந்நாள்வரை கருமக்கருங்குழியில்வேரூன்றிநின்றமையான், ஆன்மாவிற்குச் சிறந்தநன்மை இன்னதென அடியேன் அறியாதொழிந்தேன், ஆதலின், உயர்பதத்தினைத்தரவல்லதோர் நின்மலஞானத்தையருளவேண்டும்" என விரைந்து வேண்டினன். அதுகேட்டு முனிவர், கேளாய், மன்னனே!

> "கொல்லாமை முன்னினிது"
> "கொலைப்பாலுங் குற்றம்"
>
> "நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
> கொல்லாமை சூழு நெறி"
>
> "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
> தின்னுயிர் நீக்கும் வினை"

என ஆன்றோர்கூறியுள்ள சிறப்புடையநீதிகளைச் சிந்தியாது வேள்விக்கண் ஆயிரமாயிரம்பசுக்களைக் கொலைசெய்தாய். கொல்லாமையொன்றே எல்லா அறங்களுமாகும்; கொலைத்தொழிலொன்றுமே எல்லாமறங்களுமாகும். ஆயினமைபற்றி, பிறப்பு நின்றநிலையை யஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத்துறந்தாரெல்லாருள்ளும் கொலைப்பாவத்தை யஞ்சிக் கொல்லாமையைமறவாதான் உயர்ந்தவன். இக்கொல்லாவொழுக்கமுடையானதுவாணுண்மேல் உயிருண்ணுங்கூற்றுச் செல்லாது. மிகப்பெரியஅறஞ்செய்தவனும், அறக்கடிய மறம்புரிந்தவனும் இம்மைக்கண்ணே அவற்றின்பயனை நுகர்வார் என்பது நூற்றுணிபு. தேவர்பொருட்டு வேள்வியிற் கொன்றால் துறக்கத்திற்சென்று தாமுந்தேவராகி இன்பமுற்று வாழலாமென இல்வாழ்வார்க்குக்கூறப்பட்டதாயினும், அவ்வின்பம்

சின்னீரதும் சின்னுளதும் பின்னுற் பிறத்தற்கேதுவுமாகலான், வீடென்னும் அந்தமில்பேரின்ப மடையவிரும்புவார்க்கு ஆகாதென அறிந்தார்கூறினர். தன்னுயிர்போல்வதன்றோ மன்னுயிரும்? தனக்குத் துன்பமாயது பிறர்க்குத் துன்பமாவதெனவன்றோ அறிதல் வேண்டும்.

"முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்" எனவும்,
"பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் றுமே வரும்"

எனவும் உயர்ந்தார்கூறினமையான், நின்னுல் வேள்விக்கண் கொல்லப் பட்டபசுக்கள் நின்மீது ஆருக்கடுஞ்சினமுடையவாய், நீமரித்தபின் அடையும் யாதனுசரீரத்தைத் தமது வன்மையும் கூர்மையும் கொடுமையுமான இருப்புக்கொம்புகளாற் சின்னபின்னமாகக்குத்திக்கிழித் தெறியக் காத்திருக்கின்றன. ஆனதுபற்றி, நீ நலனடையும்வண்ணம் ஈண்டோர் இதிஹாஸங்கூறுகின்றேன்; அதனைக் கேட்டுணரக்கடவாய்.

முன்னொருகாலத்தில் புரஞ்சனன் எனப்பெயர்பெற்ற அரசனொருவன் இருந்தனன். அவன் நண்பினர்க்கு நல்லமுதும், பகைவர்க்குப் படுவிடமும் போன்றவன். தண்ணளியால் தருமனையும், ஈகையினுல் வருணனையும், வடிவழகால் மாரனையும் வென்றவன். அவன் கலைமகளுறைதருநாவுடையான். மலர்மகளமரும்மார்புடையான். பாரும்விசும்பும்படர்ந்த பெரும்புகழான். திசையெலாஞ் சென்றுலவுஞ் செங்கோலான், தண்டையுஞ் சதங்கையும் மயிற்பிச்சமு மணிந்து வட்டமிட்டு நட்டமிடும் வெண்புரவியும், புவியின் மேனடக்கும் புயலினம்போன்று எண்டிசைக்கரிகளும் இணையல்லவெனத்தக்க திண்களிறும், கொடுமுடியொத்தகுடமும் அருவிகளொத்தகொடிகளுமுடைய, குலகிரிபோன்ற இரதமும், விடமொத்த சினமும் நிலைபெற்றமனமும் விசையுற்றநடையும் இடியொத்தகுரலும் எழுவொத்தபுயமும் மணலொத்ததொகையுங்கொண்ட அதிருங்கழற்காற் போர்வீரரும் என்னும் நால்வகைப்படையும் தனதேவல்வழிநிற்கப்பெற்றோன். மற்றும் அப்புரஞ்சனன், ஆடவர் பெண்மையை அவாவுந்தோளினன். மாற்றலர் கலக்கமெய்த முரசங்குமுறும் வாயிலான். மற்றைய வேந்தர்களுடைய மணிமகுடங்கள்

உரிஞ்சுதலான் வயங்கிக் கதிரெறிக்கும் கழற்காலினன். வேற்றரசர் திறைகொணர்ந்து தலைப்பெய்து குடங்கையிற் றலைகிடத்திக் கிடந்துறங்கும் முற்றத்தான். மற்றும் பல்வகைய செல்வம்பொலியச் சிறப்புற்ற புரஞ்சனவேந்தன், மணியின்கணொளியும், மலரின்கண் மணமும், சொல்லின்கட்பொருளும், உடலின்கணுயிரும்போல நின்று, வானம்வழங்கவும், வையம் வளஞ்சுரக்கவும், தானந்தழைக்கவும், தவம்வளரவும், புல்வாயும் புலிப்போத்தும், பருந்தும் பைங்கிளியும் ஒருவழியோடி ஒத்துவாழவும், கரி பரி தேர் காலாளென்னும் படையாலும், வில் வாள் வேல் முதலாம்படையாலுமேயன்றி, தனது நிலையாலும், அருளாலும் பெயராலும் பகையை யடக்கிப் பார்காத்து வந்தான்.

(இன்னும் வரும்.)

கா. ஸ்ரீ, கோபாலாசாரியன்.

---

உ

# செல்வநூல்.

# Economy.

---

(ககஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

## அத்யாயம் 5.

### செல்வபரிவர்த்தனே.

### (Exchange of Wealth)

20. செல்வம் என்பது செல் என்னும் பகுதியினின்றும் உண்டான பதம். அதன்பொருள் கைவிட்டுக்கைமாறுவது என்பதே. ஞானசாஸ்த்ரரீதியாய் அதன்பொருள் எப்படியிருப்பினும், செல்வநூல்ப்ரகாரம், ஒருவனிடமிருந்து ஒருவனுக்கு மாறக்கூடியது என்பதே அதன் லக்ஷணம். இதனுல் அதற்கு இரண்டு அவசியமானதன்மைகள் இருக்கவேண்டும். அவையாவன:—சொத்து அல்லது பண்டமென வழங்கவும், அது ஒருவனுக்கு ஸ்வாதீனமாயிருக்கவும்வேண்டும். சொத்துத் தனிச்சொத்தில்லாமல் ஒரு ஜனசமூகத்தின் பொதுச்

சொத்தாயிருக்குமானால், அதற்குப் பரிவர்த்தனை (exchange) என்பதுகிடையாது. அவனவன் தனக்கு வேண்டியதை மற்றவனையபேக்ஷியாமலே எடுத்துக்கொள்வானல்லவா? சொத்து எல்லோர்க்கும் பொதுவானால் யார் கொடுப்பது யார் வாங்குவது? ஆதலால் கொடுப்பது கொள்வது விற்பது வாங்குவது முதலான தன்மைகள் வாய்ந்தவைகளே செல்வம்.

21. ஸர்வஸமம். (Socialism) முன்கூறியவாறு சொத்துக்களும் சரக்குகளும் தனிச்சொத்தாயிருப்பதும், (property of the individual) அதை ஒருவக்கு ஒருவர் கொள்வன கொடுப்பன செய்துகொள்வதும் இயற்கையமைப்பு. அப்படியிருக்க அதற்கு முற்றவும் மாறாக ஸர்வஸமவாதம் என்ற ஒருகொள்கை உலகத்தில் அதிலும் விசேஷமாய் ஐரோப்பியநாடுகளிற் பரவிவருகின்றது. ஸர்வசொத்துக்கும் ஸ்வான்தார் ராஜாங்கமென்றும், ஒவ்வொருவனுக்கும் தனிச்சொத்துக் கிடையாதென்றும், தனக்குப் போதுமானதைமாத்திரம் ஒவ்வொருவனும் உபயோகித்து மீதத்தை ராஜாங்கப்பொதுநிதியிற் சேர்த்துவிடவேண்டுமென்றும், ஜனனம், மரணம், பிணி, பசி, மூப்புத் துன்பங்கள், ஈசுவரஸ்ருஷ்டியில் ஸர்வஜனங்களுக்கும் ஸமமாயிருக்க, சொத்துவிஷயத்தில்மாத்திரம் ஏன் தனிகனென்றும் தரித்திரனென்றும் வித்யாஸம் இருக்கவேண்டுமென்றும் இச்சித்தாந்திகள் வாதிக்கின்றார்கள். இவ்வற்புதஸித்தாந்தத்தைப்பற்றிய ஆட்சேப ஸமாதானங்கள் பின் விவரமாய்க் கூறப்படும்.

## மதிப்பும் விலையும்.

## (Value and Price)

22. இனிக்கூறப்படும்விஷயங்களை நன்றாய் அறிவதற்கு இவ்விருபதங்களின் லக்ஷணங்களையும் தெளிவாய் அறிந்துகொள்ள வேண்டும்.

23. மதிப்பு. (Value) இரண்டுசரக்குகளின் தாரதம்யத்தைக் குறிப்பதே மதிப்பு எனப்படும். ஒருவீசை சர்க்கரை, இரண்டுவீசை

புளிக்கு வாங்கலாமென்றால், சர்க்கரையின் மதிப்புப் புளியைவிட இருமடங்கு என்பது பொருள். ஆகையால் மதிப்பு என்பது ஒப்பிடுவதால் ஏற்படும் தாரதம்யமே.

24. விலை. (Price) மேற்கூறியவாறல்லாமல், சரக்கின்விலையைப் பணத்தைக்கொண்டுமதிப்பதே விலை எனப்படும். அதாவது ஒருவீசை சர்க்கரை இரண்டுவீசை புளிக்குச்சமம் என்பதற்கு வதிலாக, ஒருவீசை சர்க்கரை 6 அணு விலை, ஒருவீசை புளி 3 அணு விலை யென்று சொல்லுகிறோம்.

---

## அத்யாயம் 6.

### பணம்.

### (Money)

25. பண்டமாற்றலுக்குச் சாதனமானது பணம். பணம் என்பது ஸம்ஸ்கிருததாது. பண் = மாற்று, barterரினின்றும் உண்டானது. ஸம்ஸ்கிருதத்தில் பண்யம் என்றால் பண்டம் அல்லது சரக்கு என்று அர்த்தம்.

26. பண்டமாற்றல்களின் அசௌகரியங்கள் முன்கூறப்பட்டன. இதை நீக்கும்பொருட்டே நாகரீகதேசத்தாரெல்லோரும் பணம் என்பதை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதாவது பண்டங்களின் மதிப்பைக்குறிக்கும் அளவே பணம் ஆகும்.

27. பணமானது பொன், வெள்ளி, செம்பு முதலானவைகளாகத்தா னிருக்கவேண்டுமென்பதில்லை. பலதேசத்தார் பலவஸ்துக்களைப் பணமாய் உபயோகிக்கின்றார்கள். சீனர்கள் முற்காலத்தில் தேயிலை டப்பியையும், ஆப்ரிகாதேசத்தில் ஒரு ஜாதியார், கிளிஞ்சல்களையும், க்ரேக்கர், அரபியர் முதலான பூர்வகாலத்தார் ஆடுமாடுகளையும், பணமாக உபயோகித்தார்கள். நிஜாம் ராஜ்யத்தில் இப்பொழுதும், சோகிகளையும் பணமாக உபயோகிக்கின்றார்கள். முன்னொருகாலத்தில் நந்தன் என்ற அரசன் தோற்காசு அடித்துத் தன் ராஜ்யம் முழுமையும் பணமாக வழங்கிவந்ததாகவும் கேட்டிருக்கின்றோம்.

28. ஆயினும் தற்காலத்தில், பொன்னும் வெள்ளியுமே விசேஷமாய்ப் பணமாக உபயோகிக்கப்பட்டுவருகின்றன.

29. பணமாக உபயோகிக்கத்தக்க பதார்த்தத்துக்கு (Substance), வேண்டியலக்ஷணங்களை ஜிவான்ஸ் என்னும் வித்வான் பின்வருமாறு கூறுகின்றார் அவையாவன:—

(1) இயற்கை மதிப்பு. (Intrinsic Value)

(2) எடுத்துச்செல்லச் சௌகரியம். (Portability)

(3) அழிவின்மை. (Indestructibility)

(4) ஒரேதரமுடைமை. ஏற்றத்தாழ்வானதரமின்மை. (Homogenity)

(5) பிரிக்கும்தன்மை. (Divisibility)

(6) ஸ்திரமானமதிப்பு. (Stability of Value)

(7) அறியக்கூடியதன்மை. (Cognizability) என்பனவாம்.

1. இயற்கைமதிப்பு. (Intrinsic Value) பணம் அல்லது காசாக உபயோகிக்கும் வஸ்துவுக்கு இயற்கையாகவே ஒருமதிப்பு இருக்கவேண்டும். தங்கம், வெள்ளி இவைகளுக்கு இயற்கைமதிப்புண்டு. இயற்கைமதிப்பில்லாவிடில், உலகத்தாரியாவரும், அதைத் தங்கள்சரக்குகளுக்குவதிலாக வாங்கிக்கொள்ளமாட்டார்கள். பாங்க் நோட்டுக்கள், மற்ற ஒப்பந்தச்சீட்டுகளைப்போல 'வேண்டும்போது கொடுப்பதான' ஒப்பந்தச்சீட்டேயொழிய அதற்கென இயற்கை மதிப்பு ஒன்றுமில்லை. அந்த நோட்டுகளைப்பிறப்பித்த பாங்க் திவாலாய்விட்டால், அந்தக்கடிதங்கள் குங்குமம் கட்டத்தான் உதவும். ஆனால், பொன்னினும், வெள்ளியிலும் அடிக்கப்பட்ட நாணயங்களுக்கு, எக்காலத்திலும், இயற்கைமதிப்புண்டு.

2. எடுத்துச்செல்லச்சௌகரியம். (Portability) பணமாய்வழங்கும்வஸ்து சுலபமாய் எடுத்துச்செல்லக்கூடியதாய் இருக்கவேண்டும். நெல்லைப் பணமாகவைத்துக்கொண்டால், மதுரை மாட்டுத்தாவணிக்குச்செல்பவன், 10 கலம் நெல்லையும் சுமந்துகொண்டுபோகவேண்டும்.

அப்படிக்கல்லாது பொன்னும் வெள்ளியும் பணமாய் வழங்குமானால் 5 பவுன் அல்லது 75 ரூபாயைச் சுலபமாய்த்தூக்கிக்கொண்டு ஊர் ஊராய்ப்போகலாம். வெள்ளிநாணயத்திலும் தங்கநாணயம் அதிகச் சௌகரியமென்பது இதனால் விளங்கும். சீமையிற்போல இந்தியாவிலும் தங்கநாணயம் வழங்கவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுவதற்கு இது ஒரு காரணம்.

3. அழிவின்மை. (Indestructibility) பணமாய்வழங்கும் வஸ்து அழியக்கூடியதாயிருக்கலாகாது. மாங்காய்களையும், தேங்காய்களையும் பணமாய் உபயோகித்தால், சிற்சிலநாளில் அவை அழியக்கூடியவாதலால் முதலே போய்விடும். பொன்னும், வெள்ளியும் சுலபமாய் அழியக்கூடியவையல்லாமையால் அவைகள் பணமாயிருக்க அதிகச்சௌகரியமானவை.

4. ஒரேதரமுடைமை. (Homogenity) அதாவது பணமாக வழங்கும்வஸ்து ஒரேதரமானதாய் இருக்கவேண்டும். எந்தத்தங்கத்தையும் சரியானபடி புடமிட்டால், $10\frac{1}{2}$ மாற்றாகச் சுத்திசெய்துவிடலாம். அதனால் $10\frac{1}{2}$ மாற்றுள்ள ஒருதோலாத்தங்கம் எப்போதும் ஒரே மதிப்புள்ளதாகத்தானிருக்கும். அப்படிக்கல்லாது ரத்நங்களைப் பணமாக உபயோகிப்பதென்றால் அவைகள் ஒரேதரமானவையல்ல. நல்லஜாதி, கெட்டஜாதி, நீருள்ளது, இல்லாதது என்று பலவகைப்படும். மேலும் ஒவ்வொன்றையும் ரத்நபரீக்ஷகரைக்கொண்டுதான் மதிக்கவேண்டும். அதற்குக் குறிப்பான ஒரேமதிப்பும் இராது. ஆதலால் அவை பணமாக உபயோகிக்கத்தக்கவையல்ல.

5. பிரிக்கும்தன்மை. (Divisibility) தங்கம், வெள்ளி யிவற்றில் ஒருதோலாவைக்கொண்டு ஸங்கேதமாய் ஒரு நாணயம் அடித்தால், $\frac{1}{2}$ தோலாவைக்கொண்டு அதற்குப் பாதிமதிப்புள்ள நாணயத்தை அடித்துக்கொள்ளலாம். மற்றவை அவ்வாறு உபயோகப்படமாட்டா. ஆட்டைப் பணமாய்உபயோகித்தால், அரைஆடு என்ற ஒரு கணக்குண்டா? இல்லை.

6. ஸ்திரமானமதிப்பு. (Stability of Value) அதாவது, பணமாய்வழங்கும் வஸ்துவுக்கு ஸ்திரமான விலையிருக்கவேண்டும்.

தங்கம், ஒருதோலாஎடைக்கு ஸ்திரமாய் இன்னமதிப்பென்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றபடியால், அதைப் பொதுப்பணமாய் உபயோகிக்கலாம்.

7. அறியுந்தன்மை. (Cognizability) நாணயமாய்வழங்கும் வஸ்து துரிதத்தில் இன்னநாணயம்தான், இன்னமாற்று, இன்னவிலையென்று அறியக்கூடியதாயிருக்கவேண்டும். தவிரவும் காசாகவும், அரைக்காசாகவும், காற்காசாகவும் அடிக்கச் சௌகரியமாயிருக்க வேண்டும்.

---

## அத்தியாயம் 7.

### நாணயங்கள்.

### (Coins.)

30. மனிதர்கள் பரஸ்பரம் ப்ரதிப்ரயோசன (consideration)த்தின்பொருட்டுப் பரிவர்த்தனைசெய்துகொள்ளத்தக்க ஸ்தாவர ஜங்கமப் பொருள்கள் யாவும் செல்வமென்றும், அச் செல்வத்தை அளவிடக் கூடியதே பணம் என்றும் முன் கூறப்பட்டது.

31. நாணயம். (Coin) பணமானது பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, நிக்கல் முதலான உலோகங்களில் ராஜநிருபத்தின்பேரில், அடிக்கப்படுமானால் அதற்கு நாணயம், அல்லது காசு என்று பெயர். நமது தேசத்தில் ரூபாய் என்பது செல்வமான (Unit of measure of wealth) மாய் வழங்குகின்றது. அதற்கு ஒருவித விலை ஸர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நமதுதேசத்தவர்கள் செல்வமும், வியாபாரங்களும், வரவுசெலவுகளும், வட்டி வாசிகளும், இத்தனை ரூபாய் என்று ரூபாய் அளவிலேயே மதிக்கப்படுகின்றன. இவன் 2 லக்ஷம் ரூபாய்ச் சொத்துக்காரன். அவன் வீடு 10000 ரூபாய் பெறும். இவன் கல்யாணச்செலவு ரூபாய் 3000. வித்யா விஷயமாய் ராஜாங்கத்தார் 50 லக்ஷம் ரூபாய் வாக்களித்திருக்கின்றார்கள் என்கிறோம். இங்கிலாந்து அமெரிக்கா முதலான தேசங்களில், பொன்காசுகளையே நாணயமாக வழங்குகின்றார்கள்.

## ஒற்றைநாணயமும், இரட்டைநாணயமும்.
## (Mono-metallism and Bi-Metallism)

32. ஒற்றைநாணயம். மேற்கூறியவாறு, பொன், வெள்ளி, செம்பு என்ற ஒரு உலோகத்தால்மாத்திரம் செய்யப்பட்ட நாணயத்தைச் செல்வமானமாய்வைத்துக்கொள்வதும், அதன் அளவைக் கொண்டே மற்ற நாணயங்களைக் கணக்கிடுவதும், ஒற்றைநாணய முறையாம். (Monometallism) இதனால் மற்ற உலோகத்திற் காசுகள் அடிக்கக்கூடா தென்பதில்லை. இந்தியா ஒற்றை நாணயதேசம். ஒருதோலா எடையிற் செய்யப்பட்ட வெள்ளியே செல்வமானம். ஆனால், அத்துடன், செம்பாற்செய்த துட்டுக்களும், நிக்கல் ஒரு அணாக்காசும், 15 ரூபா பெறுமான பவுனும் வழங்கிவருகின்றன. அதனால் இந்தியா ஒற்றைநாணய தேசமல்லவென்று சொல்லலாகாது. ரூபாயைத்தவிர மற்ற நாணயங்களெல்லாம், உபநாணயங்கள் (subsidiary coins) அல்லது போலி நாணயங்கள் (Token coins) என்று பெயர்பெறும். அவைகளின்விலை, ரூபாயைக்கொண்டே மேற்கூறியவாறு மதிக்கவேண்டும்.

33. இரட்டைநாணயம். (Bi-metallism) இரட்டைநாணயம் என்பதற்கு இரண்டுவித நாணயம் என்பதுமாத்திரம் அர்த்தமல்ல. இரண்டுவித நாணயங்களும் இரண்டு செல்வமான (two standard)ங்களாயிருக்கவேண்டும். அதாவது ஒருதோலாத் தங்கத்தை ஒரு காசாகவும், ஒருதோலா வெள்ளியை ஒரு காசாகவும் அடித்து அவ்விரண்டுக்குமுள்ள தாரதம்யம் உத்தேசம், 22 : 1 என்று சட்டப்படி ஏற்படுத்திவிட்டால் கடன்கொடுப்போரும், கிஸ்துசெலுத்துவோரும், மற்றெவ்விதமான தொகை செலுத்துவோரும் தங்களிஷ்டப்படி பொன்காசுமூலமாவது, வெள்ளிக்காசுமூலமாவது செலுத்தலாம். இரண்டும் செல்வமானம் ஆனபடியால் வாங்குபவன் எந்தக்காசைக் கொடுத்தாலும், வாங்கிக்கொள்ளவேண்டும்.

34. இவ்வித ஏற்பாடு முன் லத்தீன் பணமுறைச் சங்கத்திலும் (Latin Monetary Union) 1873-ம் ௵ வரை அமெரிக்கா ஐக்யநாடுகளிலும், 1785 முதல் 1873 வரை. பிரான்ஸ் தேசத்திலும் வழங்கி வந்தது. அப்பொழுது இரு நாணயத்துக்குமுள்ள வித்யாஸம், $15\frac{1}{2}$ : 1 என்ற ஏற்பாடாயிருந்தது.

## அத்தியாயம்—8.

### பண்டமதிப்பு.

### (Value of Commodities).

35. பண்டங்கள், அவ் வவற்றின் மதிப்பைக்கொண்டு மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்படும்.

1. தன்மதிப்பு. (Monopoly Value) இயற்கைப்பொருளாயும் சொந்தமாயும் வேறுவஸ்துக்களில் ஏற்படாத விசேஷமதிப்பு அமைந்ததுமான வஸ்துக்களுக்கு, தன்மதிப்புப்பண்டங்கள் என்று பெயர். சித்திரக்காரன் எழுதிவைத்திருக்கும் படங்கள், அவன் காலஞ்சென்ற பிறகு, அபரிமிதமான மதிப்படைகின்றன. ஷேக்ஸ்பியர் ஸ்வஹஸ்தலிகிதப் பழம் புஸ்தகங்கள், ஒவ்வொன்று 700, அல்லது 800 பவுன் வீதம் ஏலத்தில் விற்கப்பட்டனவாம். அதற்குக்காரணம், அப் புஸ்தகங்களின் அருமையும், ஷேக்ஸ்பியர்மீதுள்ள தெய்வபக்தியுமேயாம்.

2. வரவுக்குத்தக்கசேலவு. அதாவது ஒரேஇடத்தில் நாம் செய்யுஞ் செலவுக்குத்தக்கபடி வரும்படி சம்பாதிப்பது. ஒருவனுக்கு 1 ஏகர் நிலம் இருப்பதாய் வைத்துக்கொள்வோம். அதில் சாதாரணமாய் 10 கலம் நெல் வரும் அதில் ஏராளமாய்ப் பணச்செலவிட்டு, கிருஷிசாஸ்தர ரீதியாய் உரம் உழவு பயிர் முதலானவை செய்து, 30 கலம் நெல் எடுப்பது ஒரு முறை.

### பண்டங்களின் விலை.

3. வரவும் அழிவும். (Supply and Demand) வரவு அழிவுக்குத்தக்கபடி பண்டங்களின் விலை ஏற்படுகின்றது. ஒரு பட்டினத்தில் ஒரு வீடு விலைக்குவருகின்றது. அதை 1000 ரூபாய்க்குக் கொடுத்தால் 50 பேர் வாங்கச் சித்தமாயிருக்கின்றார்கள். 2000 ரூ சொன்னால், 20 பேர்தான் தயாராயிருப்பார்கள். 3000 ரூ சொன்னால், வாங்குவோர் 10 பேர். இவ்வாறே விலை அதிகரிக்க அதிகரிக்க, வாங்குவோர்தொகையும், குறைகின்றது. கடைசியாய் 5000 ரூபாய்க்கு வாங்குபவர் ஒருவரே. ஆகையால் அவ்வீட்டுக்கு முடிவானவிலை (Market price) ரூ 5000. அதற்குமேற்சொன்னால், ஒருவரும் வாங்கமாட்டார்கள். இவ்வுதாரணத்தில், வரவும் அழிவும்

சமப்படும்வரை, வீட்டின்விலையும் மாறிக்கொண்டே வருகின்றது. கடைசியாக விற்கத்தயாரான வீடும் ஒன்று, வாங்குபவரும் ஒருவர் தான் என்றமைந்தவுடன் அதன் விலையும் 5000 ரூபாய் என்று ஸ்திரமாகின்றது. இந்த நிலைமையில், வீட்டுக்கிராக்கியைக் கவனித்த ஒரு முதலாளி, 10 வீடுகளைக்கட்டிவிட்டால், 11 வீடுகள் தயாராகின்றன. அப்பொழுது வரவு அதிகரித்தபடியால், அதன் விலை 5000 மிராது. 3000 ரூபாய்க்குக் குறைந்துவிடும். விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலான எவ்வகைநடவடிக்கைகளும் இந்த விதிக் குட்பட்டிருக்கின்றன.

வரவு அழிவுகளுக்குத் தக்கவிலை. மேற்கூறியவாறு, ஓர் ஊரில் 2 லக்ஷம் கலம் நெல் வருஷம்ஒன்றுக்குத் தேவையென்று வைத்துக் கொள்வோம். சாதாரணவிலை, கலம் ஒன்றுக்கு ரூ 5. தேவையான 2 லக்ஷம் கலம் நெல்லும், விளைந்த வருஷமெல்லாம், ரூபாய் 5 தான் விற்கும். ஏதாவது ஒரு வருஷத்தில் லக்ஷம் கலந்தான் விளையுமானால், நெல்விலை, கலம் ஒன்றுக்குச் சுமார் ரூ 10 வீதம் விற்க ஆரம்பிக்கும். இதற்குக் காரணம் வரவு குறைவு, அழிவு அதிகம். இக்கிராக்கியை யறிந்து, பிற தேசத்திலிருந்து நெல் வா ஆரம்பித்தால், அவ்வரவுக்குத் தக்கபடி விலையும் குறைந்தே வரும். முன் விளைவு லக்ஷம் கலத்துடன் 50000 கலம் வருமானால், கலம் 7½ ரூக்கு விற்கும். லக்ஷம் கலம் வருமானால், 5 ரூபாய்க்கு மறுபடி இறங்கி விடும். அதிலும் அதிகமாய், 1½ லக்ஷம் அல்லது 2 லக்ஷம் கலம் வந்துவிட்டால், விலை, 4, 3, என்று இறங்கிவிடும். இது தவிரத் தேவையான நெல் விளைந்தபோதிலும், அயல் தேசத்தில் நெல் கிராக்கியாய் விற்றால், விளைவு தேசத்தைக் கவனியாது வியாபாரிகள் ஏற்றுமதி செய்துவிடுவார்கள். அப்பொழுது விளைவு தேசத்திலும் விலை அதிகரித்துவிடும்.

அழிவுக்குத் தக்க வரவு. ஒரு ஊரில் கலம் நெல் 10 ரூ யாக விற்கும்பொழுது விளைவிடத்தில் ரூ 5 ஆக விற்கப்படுமானால், இந்தத் தாரதம்யத்தையறிந்த வியாபாரிகள், லாபத்தை உத்தேசித்து, விளைவிடத்தில் 5 ரூபாய்க்கு, 5½ அல்லது 6 கொடுத்து, நெல் முழுமையும் வாங்கி, அதிகவிலையாக விற்கும் இடத்துக்கு அனுப்பிவிடு

வார்கள். ஆதலால், ஏற்றுமதி இறக்குமதி செய்யச் சரியான பாதைகள், வண்டிகள், கப்பல்கள், ரெயில்கள் முதலான சௌகரியங்கள் மாத்திரமிருக்குமேயானால், தேவையான இடங்களுக்குச் சரக்குகள் குறைந்த விலைக்குத் தானாகவே வந்துசேரும்.

36. செய்யும் சிலவு. (Cost of Production.) விவசாயம், கைத்தொழில், முதலியவற்றிற் செய்யும்செலவானது முதலுக்கும், உழைப்புக்கும்தக்கபடி இருக்கின்றது. வேலைசெய்யக் கூலியாட்கள் வேண்டும். அவ்வேலைசெய்து முடியும்வரை அக்கூலியாட்களுக்குக் கூலிகொடுக்க முதலும்வேண்டும். இதுதவிர, உழவு, விதை, நாற்று, நடவு முதலியவற்றிற்கும், பருத்தி, இரும்பு, கரி, முதலானவைகள் வாங்கவும் முதல்வேண்டும். ஆகையால் ஒருசரக்கை உண்டுபண்ணுவதற்கு வேலையும் முதலும் இன்றியமையாதவை. ஒருவனே முதலாளியாகவும், தொழிலாளியாகவும் இருக்கலாம்.

37. முதலாளியே தொழிலாளியாக இருப்பதன் சாதகங்கள். முதல் மாத்திரம் ஒருவன் போட்டுவிட்டுச் சும்மா வீட்டிலிருப்பானாகில், அனேக பாதகங்களிருக்கின்றன. தொழிலைநடத்தக் கூலியாட்கள், அவர்களை மேற்பார்க்க ஒருகார்யஸ்தன், (கார்யஸ்தன் நாணயஸ்தனாக இருக்கவேண்டும்) நாணயத்துக்குத்தக்கபடி சம்பளம் ஆக இத்தனை விஷயங்கள் கவனிக்கவேண்டியிருக்கின்றன. முதலாளியே நேரே வேலைசெய்வதாகவாவது மேற்பார்க்கிறதாகவாவது ஏற்படுமானால் மேற்கூறிய பாதகங்களும் ஏற்படா. அந்தச்செலவும் மீதமாகும்.

38. விலையுள்ளபண்டத்துக்கு இருவித முக்ய லக்ஷணங்கள். பண்டத்தின் உபயோகத்துக்கும், அப்பண்டத்தையடையக்கூடிய சிரமத்துக்கும், தக்கபடி அதன் விலையேற்படுகின்றது. உபயோகமுள்ள பண்டமாயினும் சிரமமின்றிக் கிடைக்குமானால் அதற்குவிலை ஏற்படாது. காற்றும், தண்ணீரும் மனிதர்க்கு அவசியமானவை. ஆனால் ஸர்வசாதாரணமா யகப்படக்கூடியவையாதலால் அவைகளுக்கு விலையில்லை. ஆனால், சுரங்கங்களிலும், தண்ணீரடியிலும் வேலைசெய்வோருக்கு அனுப்பப்படும் காற்று ச்ரமத்தின்பேரிலும் யந்திரம்முதலான செலவின்பேரிலும், அனுப்பப்படுவதால், அதற்கு

ஒருமதிப்பு ஏற்படுகின்றது. தண்ணீர் இல்லாக்காட்டில், ஒருவன் தண்ணீர்ப்பந்தல் வைத்தால், அந்தத்தண்ணீருக்கும் விலை ஏற்படுகின்றது. காட்டிலே மலரும் பூக்களுக்கும், சுண்டைக்காய் முதலியவற்றிற்கும் இயற்கைவிலை கிடையாது. அவைகளை நகரிற் கொண்டுவந்து ஒருவன் விற்பானாகில், அவைகளுக்கும் விலை ஏற்பட்டுவிடுகின்றது.

39. அதேமாதிரி, சிரமப்பட்டுச் சம்பாதித்த பொருளாயினும் உபயோகமில்லாத பண்டத்துக்கு விலையில்லை. ஷேக்ஸ்பியரின்கையெழுத்துப்புஸ்தகமென்றால், ப்ரதி ஒன்றுக்கு 1000 பவுன் விலை கொடுத்து எத்தனைபேர் வாங்குவார். அது கிடைப்பதரிதுதான். எவ்வளவோ அழகான ப்ரதிகள் கிடைக்கும் இந்நாகரீககாலத்தில், உபயோகமற்ற புஸ்தகம், ஷேக்ஸ்பியர் கையெழுத்து என்பதனால் அதற்குவிலையுண்டா. அதில் பைத்யமுள்ள இரண்டொருவர் வாங்குவது ஸகஜவிரோதமானதே.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

---

உ

# யசோதரகாவிய ஆராய்ச்சி.

கல்விப்பயிற்சியில் விருப்பமுடையாரெவரும் எளிதிற்கிடைக்கப்பெற்றுப் படிக்கக்கூடியபுத்தகங்கள் அச்சுப்புத்தகங்களேயாமல்லாது ஏட்டுப்பிரதிகள் அங்ஙனமாகா. ஆதலின் அச்சுப்புத்தகங்கள் பிழையின்றிச் சுத்தமானவைகளாக விருத்தல்வேண்டும். அச்சுப்புத்தகங்கள், அரிதிற் கிடைக்கப்பெறும் பல ஏட்டுப்பிரதிகளின் உதவியைக்கொண்டு தக்கோர்களாற் சோதிக்கப்பெற்றுத் திருத்தமான பாடங்களையே உடையனவாகவிருக்குமென்பது பெரும்பாலாருடையநம்பிக்கை. இதுவுமன்றி, அச்சுப்புத்தகங்களில் ஒருகாற் பிழைகள் சில காணப்படினும், அவைகள் வாசிப்பவர்கள் பலருடையகண்களிலும் பட்டு, அவர்களால், திருத்தமுற்று வெளிப்படுமாதலின் பிந்திய

பதிப்புக்கள் சுத்தமானபாடங்களையே உடையனவாகவமையுமென் பதற்கையமில்லை. பழைய உரைகளேனும் குறிப்புரைகளேனும் ஏற்படாத அருமையான பழைய ஏட்டுப்புத்தகங்களை முதல் முதல் அச்சிட்டுவெளிப்படுத்தும் பெரியோர்களின் சிறந்தநோக்கமு மிது வேயாகும். கிடைக்கப்பெறும் பழைய ஏட்டுச்சுவடிகளின் தொகை ஏறவேற அச்சுப்புத்தகங்களிற் காணப்படும் பிழைகளும் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைவுபட்டுவருமென்பது திண்ணம். நிற்க, புறச் சமயத்தார்களின் நூல்களைச் சரிவர ஆராய்ந்து பலருக்கும்பயன்படு மாறு அவைகளை வெளியிடக்கருதுவோர், அச்சமயத்தார்களின் கொள்கைகளையும் பரிபாஷைகளையும் அவர்களால் எடுத்தாளப்படும் பாகதச்சிதைவுகளையும் தெரிந்து, அவைகளைவேண்டியவிடத்துவேண் டியவாறு ஐயந்திரிபற விளக்கிக்காட்டல் இன்றியமையாததாகும். அன்றியும், தாம் அச்சிட்டு வெளியிடப்புகுவது வழிநூலேயாமாயின் அதன் முதனூலையும் வாசித்தறிந்தபின்னர், தாம் தொட்டவேலையை முடிப்பாராயின், அவரது முயற்சி மிகவும் சிறப்படையும். மேலும் நூலிற்கண்டகதையை மூலபாடங்களோடுமாறுபடக் கூட்டிக்குறைக் காது, எளியநடையில் எவருமறியுமாறு சுருக்கமாகக்கூறியிருத்தல் நன்று. மேலேகுறிப்பிடப்பட்டுள்ளவைகளுள் ஒன்றேனும் குறைவு படின், அக்குறைவு அச்சுப்பிரதியிலும் தலைகாட்டாதிராது, நூற்பொ ருளும் வாசிப்பவருக்குச் சரிவரவிளங்காது தடைப்படும். ஆகவே நல்லதோர் பழையநூலையும் அநியாயமாகக் குற்றங்குறைகூறிப் பழிப் புக்கிடமாக்கிப் பல ரதனைத்தூற்றுவாராவர். ஆயினும், மேற்கூறிய ஒவ்வொரு உதவியும் குறைவறவமைந்தபின்னர் வெளியிடக்கருதிக் காலங்கடத்தல் திரையவித்து நீராடற்கொப்பாகும். ஆகலின், காலந் தாழ்த்தாது கிடைத்துள்ள உதவிகளைக்கொண்டு; தெரியாதவிஷயங் களிற் கைமாட்டிக்கொள்ளாது தெரிந்தவிஷயங்களைமட்டும் அவரவர் அவ்வப்பொழுது வெளியிடுவாராயின், அவைகளெல்லாம் பின்னொரு கால் ஒன்றுகூடித்திரண்டு பெருநன்மைபயக்கும் என்பதற்குச் சந் தேகமில்லை. இதுவேயாகும் இவ் யசோதரகாவியவராய்ச்சியின்கண் இரண்டாம்முறையும் யாம் இப்பொழுது தலையிட்டுக் கொண்டதன் கருத்தும். இவ்வாராய்ச்சியின்கண் பொருத்தமில்லாதன எவையே னும் காணப்படின், அவைகளை அறிவுடையார் எடுத்துக்காட்டி உதவி புரிவாரன்றோ?

1. இவ்வாராய்ச்சிக்கென்று எமக்குக்கிடைத்த பிரதிகள், ஓலைச் சுவடிகளிரண்டும் அச்சுப்பிரதிகளிரண்டுமேயாகும். ஓலைச்சுவடிகளுளொன்று, திண்டிவனம்தாலூகா பெரமண்டூர்கிராமம் புது அப்பாண்டைநாதசாஸ்திரிகளால் தரப்பெற்றது; 1 அடி 5 அங்குலம் நீளமும், $1\frac{1}{2}$ அங்குல அகலமும் உள்ளது. அதில் முப்பத்திரண்டு ஏடுகளும், ஒவ்வொரு ஏட்டிலும் பக்கத்துக்கு ஏழு அல்லது எட்டுவரிகளும் உள்ளன. இறுதியிலுள்ள ஏட்டில் முன்புறத்தில்மட்டுமே எழுதப்பட்டுளது. அப்புறத்தில் "ஆகச் சருக்கம் நாலுக்கு விருத்தம் நூஉ௰. யசோதரசரிதம் முற்றும். சார்வரிவருஷம் மாசிமீ ௰சூவ பெரமண்டூரிலிருக்கும் அனந்தையனார் குமாரன் நேமிசந்திரன் யசோதரசரிதம் எழுதி நிறைந்தது. ........... அனந்தைய நயினார் ஸூஹஸூவிவித " என வரையப்பட்டுளது. இப்பிரதி இற்றைக்கு எழுபத்திரண்டாண்டுகளுக்குமுன்னர் எழுதியதாகும்.

மற்றொரு ஏட்டுப்பிரதி தஞ்சைமாநகரத்தின் ஒரு பகுதியின் கண்ணுள்ள கருந்தட்டான்குடி ஜைநர்கள்தெருவு இராஜாராமமுதலியாரால் உதவப்பெற்றது; 1 அடி $3\frac{1}{4}$ அங்குலநீளமும் 1 அங்குல அகலமும் உளது. இவ்வேட்டுச்சுவடியில் 42 ஏடுகள் உள்ளன. இரண்டு மூன்றேடுகளொழிய மற்றைய ஏடுகளிலெல்லாம் பக்கத்திற்கு ஐந்தே வரிகள் உள்ளன. காப்புச்செய்யுள் நீக்கிச் செய்யுட்டொகை 319. ஈற்றேட்டில் முன்புறம் மட்டுமே எழுதப்பட்டுளது. அவ்வேட்டில் "ஆகச்சருக்கம் நாலுக்குச் செய்யுள் விருத்தம் நாய௲. ஸ்ஹஸ்ஸே ஸ்ரீாஸூ. யசோதரகாவியமுற்றும். வ. ராக்ஷதவருஷம் உ௰உ வெள்ளிக்கிழமை தசமி அநுஷநக்ஷத்திரம்கூடிய சுபதினத்தில் அய்ய முதலியார்மகன் அப்பாண்டை வாசிக்கின்ற யசோதாகாவியம். ஷ அப்பாண்டை கையால் எழுதிநிறைந்தது. முற்றும் ........." என எழுதப்பட்டுளது. இவ்வேட்டுப்பிரதி இற்றைக்கு ஐம்பத்தெட்டாண்டுகளுக்குமுன்னர் எழுதப்பட்டதாம்.

அச்சுப்பிரதிகளுளொன்று நாற்பது வருடங்களுக்குமுன்னர், காஞ்சிமாநகரத்திற் கருகிலுள்ள நரியம்புத்தூர்க் குந்தியப்பநயினார் குமாரர் பாகுபலிநயினாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இவ்வச்சுப்புத்தகம் தஞ்சைமாநகரத்துக் கருந்தட்டான்குடி இராஜாராம

முதலியாரால் அளிக்கப்பெற்றது. இப்புத்தகத்தில் பா. முனியப்ப முதலியாரால் இயற்றப்பெற்ற சாற்றுக்கவியொன்று அடியில்வருமாறு காணப்படுகின்றது.

சீரோங்கும் பிண்டிநீ ழற்பெருமான் பொற்சரணஞ் சிந்தித் தேத்தும்
செயலோங்குங் கீர்த்தியசோ தரன்சரித மாமிந்தத் தெய்வநூலைப்
பாரோங்குஞ் சென்னையெழு தாவெழுத்திற் பதிப்பித்துப் பலர்க்கு நெஞ்சிற்
பரிவோங்கு மாறளித்தா னண்ணலரு கக்கடவுள் பதம்ப ராவு
மேரோங்கு நன்மனத்தா னரியம்புத் தூர்வாழு மிறைமை பூண்டோன்
எழிலோங்குங் குந்தியப்ப நயினார்மெய்த் தவத்தில்வரு மேந்த லானோன்
காரோங்குங் கரதலத்தா னறிஞர்மனக் குறிப்பறிந்து களிப்பி னீவோன்
கனமோங்கும் புகழ்பாகு பலிநயினா ரபிதானக் கர்ணன் முனே.

இவ்வச்சுப்புத்தகத்தின் ஈற்றேட்டின் இறுதியில் 'நாலாவது சருக்க முற்றிற்று. ஆகவிருத்தம் 320. யசோதரகாவிய முற்றிற்று' என்றுளது.

எமக்குக்கிடைத்த அச்சுப்பிரதிகளுள் மற்றொன்று கி. பி. 1908ல் சென்னை கபாலி அச்சுக்கூடத்தில் மகா-ா-ா-ஸ்ரீ தில்லையம்பூர் பண்டிதர் வேங்கடராமையங்கார் அவர்களால் தமக்குக்கிடைத்த ஏட்டுப்பிரதிகளின் உதவியைக்கொண்டு பதிப்பிக்கப் பெற்றது. இப்புத்தகத்தில்மட்டும் இக்காவியம் ஐந்துசருக்கங்களாகப் பிரிக்கப் பட்டுளது. மற்றைய மூன்றுபிரதிகளிலும் நான்காவதுசருக்கம் நூற்பயனுள்பட 101 செய்யுட்கள்கொண்டதாகவிருக்க, இப்புத்தகத் தில்மட்டும் நான்காவதுசருக்கம் 35 செய்யுட்கள்கொண்டதாகவும், ஐந்தாவதுசருக்கம் நூற்பயனுள்பட66செய்யுட்கள்கொண்டதாகவும் காட்டப்பட்டது யாதுகாரணம்பற்றியோ யாமறியோம். செந்தமிழ்த் தொகுதி 1,பகுதி 10ல், திருநூற்றந்தாதிக்குறிப்புரையில் "மைந்தனு மடந்தைதானு மாற்றிடைச் சுழன்றபெற்றி" என்னும் செய்யுள் யசோதரகாவியத்து நான்காவதுசருக்கத்து 79-வது செய்யுளாகப் பத்திராதிபரால் இலக்கமிட்டுக் காட்டப்பட்டுளது. இதனால் அவரது புத்தகத்திலும் நான்காவதுசருக்கம் 35 செய்யுட்களால் நிறைவுற்றதாகவில்லையென்பது திண்ணம். இத்தமிழ்க்காவியத்திற்கு முதனூலாகவுள்ள வடமொழி யசோதரகாவியத்தும் நான்குசருக்கங்களே

உள்ளன. (மகா-ா-ா-ஸ்ரீ டி. எ. கோபிநாதராவ், எம். ஏ. அவர்களால் தஞ்சை கிருஷ்ணவிலாஸ அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளியிடப்பட்ட வடமொழி யசோதரகாவியம் பார்க்க.)

II. இனி இத்தமிழ்க்காவியத்தினது பெயரைப்பற்றிச் சிறிது விசாரிப்போம். வடமொழிக்காவியத்திலுள்ளவாறு "யசோதரன்" "யசோமதி" யென்றில்லாமல் இத்தமிழ்க்காவியத்தில் 'இசோதரன்' "இசோமதி" யெனவே ஏட்டுப்பிரதிகளில் எங்கும் காணப்படுகின்றன.

"ஏத மங்கி யிசோதர னெய்திய" I. 2.

"விளைபய னிசோதரன் விழைந்து செல்லுநாள்" II. 5.

"இனையன நினைவினி லிசோதர னென்னும்" II. 10.

"எரிமணி யிமைக்கும் பூணு னிசோதர னிருநிலத்து" II. 12.

"இனையன நினைவு தம்மா லிசோதர னகரமெய்தி" II. 71.

"அன்று மன்ன னிசோதர னன்னையோடு" III. 36.

"இறப்ப ருந்துறக் கத்தி லிசோதரன்
சிறக்க வென்றனர் தீவினை யாளரே" III. 51.

"இன்னிளங் குமரனும மிசோதர னென்பதாகும்" IV. 34.

"எண்ணமி லிசோதரனோ டன்னையிவர் முன்னாள்" IV. 36.

"வளையவ ளிசோமதி மைந்தன் றன்னையே" II. 5.

"ஏரணி யார மார்ப னிசோமதி யிறைமை யெய்தி" II. 81.

"அறுத்து மீனி னவயவ மொன்றினைக்
கறித் திசோமதி யிப்புவி காக்கவோர்" III. 25.

"இத்த லத்திறை யான லிசோமதி
மத்த யானையின் மன்னவ னென்மகன்" III. 37.

"இணர்ததை பொழிலி னுள்ளா னிசோமதி யென்னு மன்னன்" IV. 22.

"இன்னுமீ தைய கேட்க விசோமதி தந்தையாய
மன்னவ னன்னை யோடு மாவினிற் கோழிதன்னை" IV. 24.

*" அனசன மமர்ந்த சிந்தை யருந்தவ னிசோ மதிக்குத்
தனயர்க டம்மை நோக்கித் தரியலீர் சரியை போமின்" IV. 56.

ஆதலின், இத் தமிழ்க்காவியத்திற்குப்பெயர் நூலாசிரியரின் கருத்துக்கிசைய "இசோதரகாவியம்" என்பதே பொருத்த முடைத்தாம்.

III. இனி அடுத்ததாக இக்காவியத்திலடங்கிய கதையை மூலத்திற்கண்டபாடங்களையொட்டிச் சுருக்கமாக இங் கெடுத்துக் காட்டுவாம்.

---

## முதற்சருக்கம்.

---

இப் பரதகண்டத்தில் ஒளதேயம் என் றொரு தேசமுண்டு. அதன் தலைநகர் இராஜபுரம் எனப்படும். அந்நகரத்தில் மாரிதத்தன் என்பான் அரசன். அந்நகரின் தென்றிசையில் சண்டமாரியென் னும் ஒருதேவதையின்கோயில் இருந்தது. அத்தேவதைக்கு வருஷம் இருமுறை சித்திரைத்திருவிழாவும் ஐப்பசித்திருவிழாவும் நடாத்துவது வழக்கம். அவ்வழக்கத்தையொட்டி சித்திரைத்திரு விழாநடாத்தக் குடிகள் அரசனை அனுமதிகேட்டனர். அரசன் அவர்களது கருத்துக்கிசைந்து, அத்தேவதைக்குப் பூசைபோடுவ தற்குவேண்டிய பலவகைப்பிராணிகளைக் கொண்டுவருமாறு அவர் களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, தானும் அவைகளைப் பார்த்துவருவ தற்காகக் கோயிலுக்குச்சென்றனன். ஆங்குத் தன்னாணைப்படி பல விதவிலங்குகளும் வந்திருக்கக்கண்டு, சண்டகருமன் என்னும்பெய ரிய கோட்டைப்பாலகனை விளித்து, "நீ நல்ல இலக்ஷணங்கள்வாய்ந்த இருவரை எங்கேனும் தேடிக்கொணர்தி, யான் அவ்விருவர்களையும் தேவிக்குப் பலிகொடுத்தபின்னரே என்குடிகள் தாம் கொணர்ந் துள்ள பல்வகைவிலங்குகளையும் பலிகொடுக்கக்கடவர்" என்று கட் டளையிட்டனன்.

* அசனம் - உண்டி. அனசனம் - உண்டிமறுத்தல்; அதாவது உபவாஸம்.

இதனிடையில் சுதத்தர் என்னும் ஜைநசங்கத்தலைவராம் முனிவர் ஒருவர் தம்மையொத்த அருந்தவர் ஐஞ்ஞூற்றுவருடனும் †உபாசகர்பலருடனும் தீர்த்தவந்தனைகள் செய்துகொண்டு அந்நகரை யடுத்த வொரு சோலையின்கண்வந்து தங்கினர். வழிநடந்துவந்த தனால் தாமறியாது தமக்குநேர்ந்திருக்கக்கூடிய பாவங்கள்யாவுந்தீர அவ்வைஞ்ஞூற்றுவருடன் அவர் அனசனத்தவமமர்ந்தனர். மற்றுள் ளோரில் இளமையிலேயே தம்மிடம் தீக்ஷைகொண்டு கூடவேவந் திருந்த தமையனும் தங்கையுமாகிய அபயருசி அபயமதி என்னும் இளைஞரா மிருவரைநோக்கி, தம்முடன் உபவாஸமிராது வெளியே சென்று ஐயமேற்றுண்டுவிட்டுவருமாறு விடைகொடுத்தனுப்பினர். அவ்விருவரும் உடன்பட்டு வெளியேசென்றபொழுதினிற் சண்டக ருமன் அவர்களைக்கண்டு மனமிரங்கினனாயினும், அரசனதாணையைப் பெரிதெனக்கொண்டு, அவ்விருவரையும் கைப்பற்றித் தன்கீழுள்ள வேலைக்காரர்கள்கையிலாக்கி அவர்களைத்தொடர்ந்துதானும் கோயிலை நோக்கிச்சென்றனன். வழியிற்செல்லுங்கால், அபயருசியும் அபய மதியும் அக்கொலையாளர்கள்கையில் தாம் பட்டுக்கொண்டதனை யறிந் தாராயினும், தம் முற்பிறப்புக்களையுணர்ந்தவராதலின் அவைகளை யோர்ந்து ஒருவரையொருவர்தேற்றிக்கொண்டு, மனந்துவளாது திட னடைந்து கோயிலையணுகி அரசன் முன்னிலையிற்சென்றனர்.

ஆங்குள்ளோர் பலருங்கூடி, காவுகொடுக்குமுன்னர் வழக்கப் படி அரசனுக்குவாழ்த்துக்கூறுமாறு அவர்களையுணர்த்தினர். அவர்க ளிருவரும் சிறிதும் அஞ்சாது முறுவல்கொண்டு அரசனைநோக்கி "நீ இவ்வுலகினிலுள்ள உயிர்களுக்கெல்லாம் நன்மைபுரிந்து எவரும் இன் புற்று வாழுமாறு நல்லறத்தைக்கைக்கொண்டு நீடூழிவாழ்க" வென்று ஆசிகூறினர். அரசனும் அங்குள்ளோரும் அதுகேட்டு வியந்து அவர்களைநோக்கி, "நீங்கள் இக்கொலைக்களத்தில் இங்ஙனம் சிறிதும் நடுக்கமின்றி முறுவல்கொண்டகாரணம்யாது? சொன்மின்" என்று கேட்கவே, அவ்விளைஞர்களும் "அடுக்குவதடுக்குமானால் அஞ்சுவ தாற்பயனென்னை? அது நினைந்தே நடுக்கமற்று நின்றோம். யாங்கள் உயிர்க்கொலைசெய்யத்துணியாதொழிந்தும், உயிர்ப்பொருளின்வடி வினைக்கொலைசெய்தபாவத்தால், அடுத்தடுத்து யாம் பெற்ற பிறவி

---

† உபாஸகர் - சிராவகர்.

தோறும் எமக்குத்தொடர்ந்துவந்த வெந்துயர்களுக் கொரு கணக்கில்லை. இங்ஙனம் கணக்கில்லாது பல்லுயிர்களையும் முயன்றுசெய்யும் கொலையினால்இம்மன்னன்வாழ்கவென்னும் எம்வாய்மொழி எவ்வாறு முடியுமோவென முறுவல்கொண்டோம்" என்றனர். அரசன் இதனைக் கேட்டு மகிழ்வுற்று, "நீங்கள்யாவர்? எக்குலத்தவர்? எங்கிருந்து வந்தீர்? இங்ஙனம் இளம்பருவத்திலே எல்லாவிதப்பற்றுக்களையும் களைந்தொழித்து இனையராகியகாரணந்தான் யாது? உங்களது முற்பவங்கள் எவை? யாவும் விளங்கக் கூறுமின்," என்றனன். அபயருசி அது கேட்டு, "இறைவனே, அறவழிச்சென்றார்க்கல்லாது மறவழிச் செல்வார்க்கு என்வாய்மொழி பயன்படாது; ஆதலின், ஆகுவதாகுக; நீ கருதியவாறு செய்துமுடிக்க" என்று கூறினன். அரசனும் அதனைக்கேட்டு,அருளுடைமனத்தனாகிக் கைவாளினைத் தரையிலெறிந்து இருகரங்களையும் குவித்து, நீயே இனி எனக்கு இறைவனாவாய்; நான் நல்வழிப்பட்டு உய்யுமாறு, உங்களது கதையை யான் அறியக்கூற வேண்டுமெனக் கனிந்துகேட்கவே, அபயருசியும் ஏதோ நற்காலவயத்தால் அரசனுக்கு நற்புத்திதோன்றியதேபோலுமென நினைந்து கீழ் வருமாறு சொல்லத்தொடங்கினன்.

## இரண்டாவது சருக்கம்.

அவந்திநாட்டின் தலைநகராம் உஞ்சையினீநகரத்து அசோகன் என்னும் ஓர் அரசன் அரசாண்டுவந்தான். அவ்வரசனது இராணி சந்திரமதியெனப்படுவாள். அவர்களது புதல்வன் யசோதரன். அப்புதல்வனுக்கு அரசன் அமிருதமதியென்னும் பெண்மணியை மணம் புரிவித்தனன். யசோதரனுக்கும் அமிருதமதிக்கும் யசோமதியென ஒரு மைந்தன் பிறந்தான். இவ்வாறிருக்க, அசோகராஜன், ஒருநாள் ஆஸ்தானமண்டபத்திற் சிற்றரசர் பலரும் அடிதொழ, எதிரிலிருந்த கண்ணாடியைத் தான் நோக்கவே உச்சிமயிரொன்று நரையினால் வெளுத்திருக்கக்கண்டு, முதுமைவந்ததையுணர்ந்து, அரசியலை மகன்பால்விடுத்து, தன்னையொத்தபலரும் தானுமாய்க் காட்டகத்துத் தவம்புரியச்சென்றனன். பிறகு யசோதரராஜன் அரசுசெலுத்திவந்தனன்.

யசோதரராஜன் அரசுபுரியுங்கால், மனைவியாம் அமிருதமதியும் தானுமாய் ஒருநாள் பின்னிரவில் வெகுநேரம்வரையிற் கூடிக்குலாவி, பின்னர் அவளுடன் நித்திரைகொண்டனன். அமிருதமதி சிறிது நேரம்நித்திரைகொண்டு, பின்னர் யானைச்சாலையையடுத்து எவனோ இனியகுரலிற்பாடும் பாட்டுச்சத்தம் கேட்டு விழிப்புற்று அதனையே மனமுவந்துகேட்டுக்கொண்டிருந்து, அவன்பால் தன்மனத்தினைப் பறிகொடுத்தனள்.. புலர்காலையில் துயிலொழிந்து, அக்கீதம்பாடிய வனையேநினைந்து வேறொன்றிலும் மனஞ்செல்லாது தனிமையாக வோரிடத்துக் கவலைகொண்டிருந்தனள். அப்பொழுது தோழியாகிய குணவதி அவ்வழியேவந்து அவளைக்கண்டு, என்னை? நீ தன்னந் தனியே அநாதையேபோல இங்ஙனமிருந்து மனக்கவலையுற்றிருக் கின்றனை? யென்றுவினவவே, அமிருதமதியும் தோழியைநோக்கி "என் சொல்வேன், வயிறுவாடாது நல்லுணவை முட்டின்றி நிரம்ப வுண்டு பருத்து நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்துவந்த நல்லதொருமதயானை, உறுதியாகக் கையிற்பிடித்த அங்குசத்தால் ஒருவனாற் குத்துண்டு துவண்டுநிற்பதேபோல், இது காறும் அரசனதுபெருந்தகைமையை உன்னியுன்னிப் பூரித்திருந்த எனதுமனக்களிப்புத் திடீரென நேற்றிரவு எவனோ ஒருவனது செவ்விய வாயினின்றெழும்பிய இன்னிசையால் துவண்டு தடுமாறி நோவுற்று வருந்துகின்றது, என்செய்வேன்" என்றனள். அதனைக் கேட்டுத் தோழி அவளது உள்ளக்கருத்தினை யறியாதவளேபோல், தேவி, ஏதோ கனவினில் மனம் பங்கப்பட்டதாகத்தோன்றியதனைப் பெரிதும் நனவிலேயே மனம்பங்கப்பட்டதுபோற்பாவித்து வருந்து கின்றனையே; உனது சொல்லரும்பெருந்தகைமையை என்னென்று புகல்வேன் என்றனள். அரசி, தன்னுள்ளக்கருத்தினைத் தோழி உள் ளவாறு அறிந்திலள்போலுமெனநினைந்து, உள்ளபடி வெளியிட்ட னள். தோழி அதனைக்கேட்டு, உன் மனத்தில் இல்லாததை இங் ஙனம் புனைந்துகூறுவது ஏன், என்றுசொல்லி இருகைகளாலும் தன் செவிபுதைத்துநின்றனள். அமிருதமதி, பின்னும் தன்தோழியை நோக்கி, "யான் மாள்வராகத்தின் பஞ்சமஸ்வரத்தில் அவனது செவ்விய வாயினின்றெழும்பிய கீதத்தைக்கேட்டிலேனாயின், அவ னுக்கு உற்றவுறவினளாகேன், நீ மறுத்துக்கூறுவையாயின்,

இன்றே என்னுயிர் என்னைவிட்டுநீங்கும்; பிறிதொருபேச்சில்லை; என்னுயிரைக் காக்கவல்லவர் நின்னையும் இன்னிசையிற்பாடிய அவனையும்விட் டெவருமில்லை; ஆதலின், நீ தக்கதுதுணிவையாக" என்றனள். தோழியும், இவளது உயிர்நீங்கின், அது பெரும்பழியை விளைவிக்குமெனஅஞ்சி, அவளதுகருத்துக்கிசைந்து அவ்விடம் விட்டு விரைந்தேகினள்.

(தொடரும்.)

T. S. குப்புஸ்வாமிசாஸ்திரி,
தஞ்சாவூர்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS

# Three Powerful Natural Humours of The Human Body

## வாத பித்த கபங்கள்.*

:(o):

இப்பெயர்கள் மூன்றும் இந்துக்களுக்கு அதிலும் சுதேசவைத்தியருக்குப் புதிதானவையல்ல. இந்துக்களிற் பெரும்பான்மையோரும் இந்தியவைத்தியர்களில் ஒவ்வொருவரும் ஒரு ரோகியைப் பார்த்தவுடன் இம்மூன்றில் ஒன்றிரண்டோ அல்லது அனைத்துமோ விகாரமடைந்திருப்பதாகக் கூறுவதியல்பு. ஆனால் இவற்றின் தத்துவங்கள் இன்னவென்று எடுத்தறிவிக்கும் வைத்தியர் மிக அரியர். ஆகையினாலேயே படிக்காத அல்லது சிறிதுபடித்தஜனங்களைத் தவிர்த்து நன்குகற்றறிந்த நாகரிகஜனங்களுக்கு இவ்விஷயங்களில் நம்பிக்கைக்குறைவு நாளடைவில் ஏற்பட்டுவருகின்றது. ஆகையினால் இப்பொழுது இவற்றின் வாஸ்தவாம்சத்தை விசாரித்து அனைவரும் அறியுமாறு விளக்கவேண்டுவது மிகவும் அவசியம். ரோகங்களைப் பரீக்ஷிக்க ஆரம்பிக்கையில் வைத்தியர் அனைவரும் வாத பித்த கபங்கள் எந்தநிலைமையில் இருக்கின்றன வென்பதையே முதலிற் கவனிக்கின்றமையாலும், சுதேசவைத்தியநூல்களெல்லாவற்றிலும் ஆரம்பத்திற் பெரும்பாலும் இவ்விஷயமே கூறப்பட்டிருப்பதாலும்,

* இது "வைத்தியகலாநிதி" என்னும் பத்திரிகையிலிருந்து ஷை பத்திராதிபர் விருப்பத்தின்படி சேர்க்கப்பட்டது.

இப்பத்திரிகையின் முதல்ஸஞ்சிகையிலேயே இவ்விஷயவிசாரணை ஆரம்பத்திற் செய்யப்படுவது அவசியமாயிற்று. ஆகையால் இங்கு ஸங்கிரஹமாய் இவ்விஷயத்தை விசாரிப்போம்.

வாதம், பித்தம், கபம் என்கிற இம்மூன்றும் ஆயுர்வேதபரிபாஷைப்படி மூன்றுதோஷங்களெனப்படும். சரீரத்தில் ரோககாரணங்கள் எவையாகிலும் ஏற்பட்டால் அக்காரணங்கள் வாத பித்த கபங்களில் ஒன்றிரண்டையோ அல்லது மூன்றையுமோ முதலில் தாக்கி அவற்றை விஷமப்படுத்த, பிறகு அவ்விதம் விகற்பமடைந்த இவை சரீரத்திலுள்ள மற்ற தாதுக்களையும் (Tissues) தோஷிப்பிக்கும் சுபாவமுடையவையாகையால் இவற்றிற்குத் தோஷங்கள் எனப் பெயர்வந்தது. ஆனால் இத்தோஷங்களின் சொரூபமென்ன? இவை சரீரத்திலிருக்குமிடம் யாவை? இவற்றின் வேலைகளென்ன? என்பதைப்பற்றியே இப்பொழுது விசாரம் செய்யப்படும். வெளியில் எங்கும்வீசியடிக்கும் அல்லது மூச்சுவிடப்படும் காற்றுப்போன்றதே வாதம் அல்லது வாயுவென்றும், வாந்திமுதலியவுண்டாகும்போது வெளிவரும் வயிற்றிலுள்ள மஞ்சள்நிறமான நீர்மாதிரியுள்ளதுமட்டுமே பித்தமென்றும், ஜலதோஷம்பிடித்தவருடைய மூக்கிலிருந்து வெளியாகும் சளியே சிலேஷ்மம் அல்லது கபமென்றும் பெரும்பாலார் எண்ணியிருக்கிறார்கள். ஆனால் நாடிமுதலியவற்றைப் பரீக்ஷிக்கும்பொழுதும் தோஷங்களின்குறிகள் கூறப்படுகிறபடியால், இவ்விதம் வழங்கப்படும் கபம் முதலானவை எவ்விதம் இந்த நாடிமுதலியவற்றில் ஸம்பந்தப்படுமோ அதைமட்டும் யுக்தியுக்தமாகவும் பிரத்யக்ஷானுபவத்திற்கு இணங்கவும் அறிவிப்பவரில்லை. ஆனால் வாத பித்த கபங்களின் ஸ்வரூபங்கள் முற்கூறியவிதமாயிருப்பதாக நன்கு சாஸ்திரதத்துவவிசாரம்செய்தவர் கூறமாட்டார்.

மூன்றுதோஷங்களையும் சரீரத்திலுள்ள மூன்றுவிதசக்திகளாகக் கொள்ளவேண்டும்.* ஏழுவிதமான தாதுக்களாலானசரீரத்திற்கு†

* நான்காவது சக்தி அல்லது தோஷமும் (Humour) ஒன்று கிரீக்தேசத்தவரால் முன்னால் வழங்கப்பட்டதுண்டு. ஆயுர்வேதசாஸ்திரத்தில் இரத்தமும் ஒருவிதத்தில் தோஷமாகக் கூறப்படுகிறபடியால் இதை ஆதாரமாகக்கொண்டே கிரீக்தேசத்தவரும் நான்குசக்திகள் (Four Humours) என்று வழங்கியதாகக் கருதுகிறோம்.

† இரஸம், இரத்தம், மாம்ஸம், கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்லம் என்னும் இவ்வேழும் ஸப்ததாதுக்கள் எனப்படும்.

வெளிப்புறங்களிலிருந்து ஏதேனும் பதார்த்தத்தினுல் அல்லது வேறு எக்காரணத்தினுலாவது கெடுதி நேரிடாமலிருக்குமாறு சரீரத்தைக் காத்துக்கொண்டிருப்பதற்காக இம்மூன்று சக்திவிசேஷங்களைக் கடவுள் ஸ்ருஷ்டித்திருக்கிறுர். ஏதாவது சரீரத்திற்கு ஸம்பந்தப்படாத ஒரு பொருள் தேஹத்தினுட் சென்ருல், இம்மூன்றில் ஒன்றிரண்டோ அல்லது அனைத்துமோ சேர்ந்து வெளிப்பொருளென்னும் பகையாளியைச் சரீரத்தைவிட்டு அப்புறப்படுத்த முயல்கின்றன. இவ்விதஸமயத்தில், வெளிப்பொருள் விசேஷவலியுள்ளதாயிராமற்போனுல் தோஷங்களெனப்படும் சக்திகள் அவற்றை வெளிப்படுத்தி மற்ற தாதுக்களைக் காப்பாற்றும். இதற்கு மாருக, வெளியிலிருந்துவந்த பதார்த்தங்கள் வெகு வலியுள்ளவைகளாயிருந்தால், தோஷங்களுடன் முதலிற் போராடி, பிறகு தோஷங்களுக்கும் வைஷம்யத்தையுண்டாக்கி அவற்றின்மூலமாகவும் நேராகவும் சரீரத்திலுள்ள தாதுக்களைக் கெடுக்க முயல்கின்றன. இப்படி ரோகங்களை உண்டுபண்ணுவதற்குக் காரணமானவிஷயங்கள் அல்லது வஸ்துக்களெல்லாம் நமது சரீரத்திலுள்ள தாதுக்களைத்தாக்குவதற்கு முன், தாதுக்களைக் காப்பதற்கென்று ஏற்பட்டிருக்கும் தோஷங்களென்னும் சக்திகளை எதிர்த்து அவற்றுடன் போராடவேண்டியிருப்பதாலேயே, எந்த ரோகமுண்டானுலும் ஒவ்வொன்றிலும் முதலில் வாத பித்த கபங்கள் விகற்பமடைகின்றனவென்றும், ஆகையினுலேயே எல்லாரோகத்திலும் முதன்முதல் வாத பித்த கபங்களின் நிலைமைகளே பரீக்ஷிக்கப்படவேண்டுமெனவும் சாஸ்திரம் முறையிடுகின்றது.

சரீரமானது ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் என்கிற ஐந்துபூதங்களால் ஆக்கப்பட்டிருப்பதாக ஆர்யவைத்தியசாஸ்திரிகளைப்போலவே வேதாந்திகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சரீரத்திலுள்ள இந்த பஞ்சபூதங்களும் அவற்றின்வேலைகளும் யாவை? இந்தக்கேள்விக்கு விடையளித்துவிட்டால் மூன்றுதோஷங்களின் தத்துவமும் ஒருவாறு அறியப்படலாம். அதாவது, சரீரத்திலுள்ள, ஏழு தாதுக்களும் சேர்ந்து ப்ருதிவீ யென்னும் பூதத்தின் சில அம்சங்களால் ஆக்கப்பட்டனவாம். அப்படியானுல் மிகுந்துள்ள நான்குபூதங்களுக்கும் ப்ருதிவீபூதத்தினுலான ஏழு

தாதுக்களும் ஆதாரமாகவேண்டுமல்லவா? ஆம்; ஏழுதாதுக்களும் கேவலம் பந்தமானவையும் அசைவதற்குச் சக்தியற்றவையும் கனமுமான பார்த்திவவஸ்துக்களாலானதாலும், அந்த தாதுக்கள் அவற்றிற்கு வேண்டிய வேலைகளைச் செய்துகொள்வதற்கும் தீங்குகள் நேரிடாவண்ணம் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கும் திறமையற்றவையாதலாலும்,அவற்றைப்பாதுகாத்து அவற்றின்வேலைகளைக் கிரமமாய் நடத்துவதற்காக அப்பு, தேஜஸ், வாயு என்னும்வேறான மூன்றுபூதங்களின் அம்சங்களால் முறையே கபம், பித்தம், வாதம் என்கிற மூன்று தோஷங்கள் உண்டாயின. ஆகையினால்தான் ஜலத்திற்குண்டான குணங்கள் யாவும் கபத்திற்கும், தேஜஸ்ஸின் குணங்கள் பித்தத்திற்கும், வாயுவின் குணங்கள் வாதத்திற்கும் வைத்திய சாஸ்திரத்திற் கூறப்பட்டுள.* ஆகையினால் வாத பித்த கபங்கள் என்னும் தோஷங்கள் வாயு, தேஜஸ், அப்பு என்கிற மூன்று பூதங்களின் அம்சங்களாலுண்டானவை யென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் சரீரத்திலுள்ள தாதுக்கள் பார்த்திவங்களென்றும், தோஷங்கள்மூன்றும் வாயு தேஜஸ் ஜலம் என்பவைகளாலுண்டானவையென்றும் ஏற்பட்டபின், ஆகாயம் என்னும் பூதம் சரீரத்தில் எதைச் சேர்ந்ததென்று கேட்கக்கூடும். ஆகாயம் என்னும் பூதம் சூனியமான வஸ்துவாகத் தோற்றுவதால், அதுவும் நமது சரீரத்தினுள் அதற்கேற்ற ஓர் இந்த்ரியத்தை ஏற்படுத்தக் காரணமாயிருக்கிறது. இவ்வாறு ஆகாயத்தினாலான மஹாஸூக்ஷ்மமான இந்த்ரியமே மனதெனப்படுகின்றது. ஆகவே இப்பொழுது சரீரத்தில் ஐந்து பூதங்களும் இவ்விவ்விதமாக அடங்கியிருக்கின்றனவென்று விவரித்தோம். மிகவும் ஸ்தூலமான ப்ருதிவியின் அம்சங்களால் மிக ஸ்தூலமான தாதுக்களும், மிகவும் ஸூக்ஷ்மமான ஆகாயத்தின் அம்சத்தால் மிகஸூக்ஷ்மமான மனதும் படைக்கப்பட்டதாக மொழிந்தோம். அன்றியும் ப்ருதிவியினாலான தாதுக்களுக்காக மூன்றுதோஷங்கள் ஏற்பட்டிருப்பதுபோல் ஆகாயத்தினாலான மனதுக்கும் ஸத்வம், இரஜஸ், தமஸ் என்னும் குணங்களாகிற வெகு

*அஷ்டாங்கஹ்ருதயம், சரகசம்ஹிதை இவற்றில், ஸூத்ரஸ்தானத்தின் முதல் அத்தியாயத்தையும், சரகத்தில் விசேஷமாய் வாதகலாகலீய அத்தியாயத்தையும், இத்துடன் வெளியீடப்படும் சார்ங்கதரசம்ஹிதையையும் பார்க்க. [சார்ங்கதரசம்ஹிதையில் இவ்விஷயம் சுருக்கமானது.]

ஸூக்ஷ்மமான வேறுவித மூன்றுதோஷங்களுண்டு. ஆகையினுலேயே மனிதரில் வாதப்ரக்ருதி, பித்தப்ரக்ருதி, கபப்ரக்ருதி என்று ப்ரக்ருதிகள் கூறப்படுங்கால் ஆயுர்வேதநூல்களில் அந்த ப்ரக்ருதியுள்ள மனிதர்கள் முறையே தமோகுணமுள்ளவரென்றும், இரஜோகுணமுள்ளவரென்றும், ஸத்வகுணமுள்ளவரென்றும் கூறப்பட்டிருக்கிறது.* சரீரத்திலுள்ள வாத பித்த கபங்கள் முதன்முதலில் வைஷம்யப்பட்டு அவற்றின்மூலமாய்த் தாதுக்கள் விகாரமடைவது போல், ஸத்வ ரஜஸ் தமஸ்ஸென்னும் மானஸிகதோஷங்களும் அவ்விதமே முதலில் ஏதாவது சில காரணங்களால் தாக்கப்பட்டு, அதனுல் மானஸிகதோஷங்களுக்கு வைஷம்யம் ஏற்பட அதன்பிறகே மனதும் விகாரங்கொள்ளும்.

இம்மூன்றுதோஷங்களின் ஸ்வரூபங்கள் எத்தகையனவென்று விசாரித்து விஷயத்தை முடிப்போம். இங்கு ஆங்கிலேயரது சரீர தத்துவங்களின் கோட்பாட்டின்படி மூன்று விஷயங்களை எடுத்துக் கொள்ளவேண்டும். அவற்றுள் (1) நரம்புமண்டலங்களின் (Nervous System) மூலமாகவே சரீரத்தில் தெரிந்தும் தெரியாமலும் அசைவுமூலமாய் எல்லாக்காரியங்களும் நடப்பதால், அக்காரியங்கள் யாவும் வாயுவென்னும் சக்தியினுலேயே நடந்தேறுவதாய் அறிய வேண்டும். அந்த நரம்புமண்டலங்களில் ஓடும் உணர்ச்சிக்குறிகளே (Impulse) வாயுவென்னும் சக்தி அல்லது வாததோஷமாகும். நினைத்தபோதெல்லாம் விஷயங்களும் வேலைகளும் வெகுவேகமாய் நடந்தேறுவதால், இந்த சக்தி வாதம் என்று கூறப்படுகிறது.† சரீரத்தில் எப்பொழுதும் எவ்விடத்திற் பரிசித்தாலும் வாயுவென்னும் சக்தியானது அவ்விஷயத்தை உடனே புத்திக்கு எட்டவைக்கிறது. வாதமாவது, சரீரத்தில் உள்ளும் புறமும் ஏதாவது வெளிப்பொருள்

---

* ஸுச்ருதஸம்ஹிதையில் சாரீரஸ்தாநம் 4-வது அத்தியாயத்தில் இவ்விஷயம் விவரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க.

† ஸம்ஸ்க்ருதத்தில் 'வா' என்னும் தாதுவிலிருந்து (Root) 'வாத' அல்லது 'வாயு' என்னும் பதம் உண்டாயிற்று. 'வா' என்கிற தாதுவுக்கு அசைவு, வாஸனைமுதலியவற்றின் உணர்ச்சி என்று இருபொருளாதலால், அவ்விருவிதமானபொருளும் இந்தத் தோஷத்திற்குப் பொருந்துமென்று நிச்சயித்து வாதம், வாயு என்று பெயரிடப்பட்டது.

வந்து கஷ்டப்படுத்தாமல் வெகு ஊக்கத்துடன் சரீரமெங்கும் வியாபித்திருந்து அதற்குண்டான உணர்ச்சியின்மூலமாய்ச் சரீர தாதுக்களைக் காத்துவருகிறது. (2) உணவு முதலியவற்றைப் பக்குவம் செய்வதற்காகக் குடல்களில் அடங்கியுள்ள ஒருவகையான ஜாடராக்னியென்னும் உஷ்ணமும், இரத்தத்தின்மூலமாய்ச் சரீரமெங்கும் பரவியிருக்கும் தேகச்சூடும் (Animal heat) பித்தம் என்பதாக வழங்கப்படுகின்றது. பித்ததோஷமென்னும் இந்த சக்தியானது சரீர தாதுக்களில் தஹிக்கவேண்டிய (Oxydation) அம்சங்களைத் தஹித்தும், தாதுக்களை எப்பொழுதும் அததற்குத் தகுந்த பக்குவமான நிலைமையில் வைத்தும் சரீரத்தைப் பாதுகாக்கக்கூடியது. (3) சரீரத்தினுள் சில குழாய்களில் ஓடும் நிணநீர் (Lymph) என்னும் திரவமே கபமென்றும், அதன்வேலையே கபத்தின்சக்தியென்றும் எண்ணவேண்டும். கபத்திற்குக்கூறியுள்ள வெண்மைநிறம் முதலியவை இந்த நிணநீருக்கும் இருப்பதுடன், கபமும் சரீரத்தைக் காத்து இரக்ஷிக்குங்குணமுடையதென்று முன் சொல்லியிருப்பதற்கேற்க, நிணநீரானது சரீரத்தினுள்வரும் எந்த வெளிப்பொருளையும் கவர்ந்திழுத்துத் தன்னிடம் பிடித்துவைத்துக்கொண்டு, பிறகு அப்பொருள்களை வெளியிற் கழித்தோ, பதனழித்தோ, அவற்றினுலுண்டாகும் கெடுதிகளைச் சரீரத்தில் அணுகவிடாமல் தாதுக்களை இரக்ஷிக்குந்தன்மையது. நிணநீர் என்னும் கபத்திற்கு அவ்வித சக்தியிருப்பதாலேயே யானைக்கால், ப்ளேக் முதலான வியாதிகளில் கபமானது அவ்வியாதிகளுக்குக் காரணமான கிருமி முதலானவற்றைச் சேர்த்து நிணநீர்க்கிரந்திகளென்னும் (Lymphatic glands) துடையிடுக்குமுதலிய இடங்களிலுள்ள சிறு கட்டிபோன்ற அவயவங்களில் அடக்கிவைத்துத் தன்னுடைய சக்தியைக்கொண்டு முன்சொன்னவிதம் வேலைசெய்து சரீரத்தைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கின்றது. ரோகங்களையுண்டாக்குவதற்கு பிராணிகளின் உடலில் உட்செல்லும் ஏதுக்களெல்லாம் அவ்வவற்றின் தன்மைகளுக்கு ஏற்றவாறு சில வாதத்தையும், வேறுசில பித்தத்தையும், மற்றும் சில கபத்தையும் தாக்கிப் பிரத்தியேகமாய் ஒவ்வொன்றை அல்லது இரண்டிரண்டை விஷமிக்கச்செய்வ தியல்பு. சில மூன்று

தோஷங்களையுமே ஒருமிக்க விஷமிக்கச்செய்யும் சுபாவமுள்ளவை கள். இந்த மூன்றுதோஷங்களும் மனிதருக்குப் பிறக்கும்போதே தாதுக்களுடன் கலந்துண்டாவதுடன், ஒவ்வொருவருக்கு ஒவ் வொருதோஷம் மேம்பாடடைந்து மூன்றுவிதமான ப்ரக்ருதிகளை யும் உண்டாக்குகின்றன. இவையே (1) வாதப்ராக்ருதி (Nervous), (2) பித்தப்ரக்ருதி (Bilious), (3) கபப்ரக்ருதி (Phlegmatic) எனப்படுகின்றன. ஒவ்வொரு தோஷமும் ஐந்தைந்துவிதமாக ஸூக்ஷ்மமானபிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருப்பதால், ப்ரக்ருதிகளி லும் அவ்விதமே வேறுசிலவகைகளுமுண்டு. அவற்றைப்பற்றி மற்றொருஸமயத்தில் விவரிப்போம். இம்மூன்று தோஷங்களுள் வாதமானது மற்ற இரண்டுதோஷங்களையும் தூண்டி அவற்றிற்கு ஸஹாயமாயிருப்பதுடன், தாதுக்களையும் அவை செய்யவேண்டிய காரியங்களில் தூண்டியும், தனது ஆட்சியின்கீழ்ச் சரீரமனைத்தை யுமே வைத்துக்கொண்டும், ஸ்வதந்திரமாய் வேலைசெய்துவரும் வெகு சிறந்தசக்தியுடையதாயிருக்கின்றது. மற்ற இரண்டுதோஷங் களும் சிறிது குறைவானசக்தியுடையவையாய் வாதத்திற்கு அதீன மாகவும், மற்ற தாதுக்களும் அவ்விதமே எல்லாத் தோஷங்களுக் கும் விசேஷமாய் வாதத்திற்கும் ஸ்வாதீனப்பட்டிருக்கின்றன.* இவற்றைப்பற்றி இன்னும் விசேஷமாய் அறியவேண்டிய ஸூக்ஷ் மாம்ஸங்கள் அதிகமிருப்பதால், தத்துவமறிந்தவர் சாஸ்த்ரரீதியாயும் யுக்தியுக்தமாகவும் வியாஸங்கள் எழுதுவராயின் அவற்றை நமது பத்திரிகையில் பிரசுரித்து இன்னும் அநேக ஆராய்ச்சிசெய்ய உத் தேசித்திருக்கின்றோம்.

---

* "பித்தம் பங்கு கப: பங்கு: பங்கவோ மலதாதவ: வாயுநா யத்ர நீயந்தே தத்ர கச்சந்தி மேகவத்."—பித்தம் கபம் என்னும் இரண்டு தோஷங்களும் ஏழுதாதுக்களும் ஸ்வாதந்தரியமற்றவை; வாயுவினால் அடித்துத்தள்ளப்படும் மேகம்போல், வாதமென்னும் தோஷத்தினால் ஏவப்பட்டு அதன்போக்குக்குத் தகுந்த செயல்களை மற்றதோஷங்களும் தாதுக்களும் செய்துவருகின்றன. [சார்ங்கதரஸம்ஹிதையைப்பார்க்க.]

ஸ்ரீ:

# ஓ ப்ராட் டுரை.

"வாத பித்த கபங்கள்" என்னும் வியாசமானது "வைத்திய கலாநிதி"ப்பத்திராதிபரால் நுணுகிஆராய்ந்தெழுதப்பட்டது. இதில் இதுகாறும் விளங்காத வாத பித்த கபம் என்னும் சரீரதத்துவங் களைத் திருசியதத்துவங்களாகவே ஒருவாறு விளக்கியிருக்கிறார்கள். சரீரதத்துவங்களில் ஒருசில திருசியங்களாயும், வேறுபல அதிருசியங் களாயுமுள்ளன. சாத்திரங்களான்மாத்திரம் அறியப்படுந்தத்துவங் களை அதிருசியதத்துவமென்றும், அநுபவத்தாலும் அறியத்தக்க தத்துவங்களைத் திருசியதத்துவமென்றும் வைத்து விவகரிப்போம். திருசியத்தத்துவங்கள் தக்ககருவிகளைக்கொண்டு கண்கூடாகக்காணும் இயல்புடையவாதலால் அவை எல்லாராலும் அங்கீகரிக்கப்படுகின் றன. அதிருசியதத்துவங்கள் ஒருவாற்றானுங் கண்கூடாகாது பலரா லும் பலபடியாகக் கற்பிக்கும்படி சாஸ்திரங்களான்மாத்திரம் அறியக் கிடக்கின்றன. நம்முன்னோரான ஆயுர்வேதசாஸ்திரகர்த்தர்கள் இக்காலத்தவர்போற் கருவிகளைக்கொண்டு கண்கூடாகக்காணாது யோகமுதிர்ச்சியுடையராய்த் திருசியங்களும், அதிருசியங்களுமா யுள்ள தத்துவங்களையெல்லாம் ஞானக்கண்ணால் (யோகஜப்பிரத்திய க்ஷத்தால்)கண்டு சாஸ்திரங்களெழுதிச்சென்றனர். அவரதுகொள்கை களுள் சரீரங்களெல்லாம் பஞ்சபூதங்களின் விஷமஸம்யோகத்தால் ஆக்கப்பட்டனவென்பதும், அவற்றுள் "நம்மனோர்யாக்கை மண் கூற்றுடம்பே" என்று சொல்லும்படி மானுடசரீரம் பிருதிவியின் அமிசத்தையே பெரும்பாகமுடையதென்பதுமே முக்கியமாம். நோ யென்பது இயற்கையின்வேறாய சரீராவயவவிகாரகாரணமாய்ச் சரீரி யைத்துன்புறுப்பதேயாம். பிருதிவீமயமானசரீராவயவவிகாரத்துக்கு அப்பிருதிவியைக்காட்டிலும் இதரகாரணங்களிருக்கவேண்டும். ஏனெ னில் தானே ஒன்று தன்னந்தனியாய்நின்று விகாரமடையமாட்டா தன்றே! ஆதலால் சரீராவயவவிகாரத்துக்கு அவ்வவயவரூபமான பிருதிவியுடன் கூடிக்கலப்புற்றிருக்கும் அப்புமுதலிய சூக்ஷ்மபூதங் கள் காரணமாகவேண்டும். அவற்றுள் ஆகாயம் சர்வவியாபகமாயும்,

ஒருசெயலுமில்லதாயும், நிர்விகாரமாயும், சங்கோசவிகாசமில்லதாயும் என்றும் ஒருபடிப்பட்டதாயுமிருத்தலால் அது விகாரகாரணமாகிற தில்லை. அது விகாரகாரணமானால் அதனால்வரும்நோயும் சரீரத்தோடு தோன்றிச் சரீரமுள்ள அளவும் நீங்காதிருக்குமாதலால் அது பிரித் துணரப்படாததொன்றும். ஆகவே அவ் வாகாயத்தினையொழித்து மற்றை வாயுமுதலிய மூன்று சூக்ஷ்மபூதங்களின் விஷமத்தால் ரோகமுண்டாகவேண்டுமென்று துணிந்து அம்மூன்று பூதங்களின் சூக்ஷ்மாம்சங்களாய்ச் சரீரத்தில் வியாபித்திருக்கும் தாதுக்களுக்கு வாத பித்த கபம் எனப் பெயர்கொடுத்து அவற்றாலாகும் நோய்களை யும் அவற்றின் பெயராற் பகுத்திருக்கின்றனர். வாத பித்த கப தாதுக்கள் உடலின்பகுதிக்கேற்ப வேண்டுமளவு அமைந்து தன் னிலையினிற்கும்போது, உடலைப்பாதுகாக்கின்றன. அவையே உணவு செயல்களதொவ்வாமையால் ஏற்றத்தாழ்வடையும்போது அவ்விஷம பரிணமத்தால் நோயுண்டாக்குகின்றன. அவற்றை விஷமமாக்ச்செய் யும் உணவுசெயல்களதொவ்வாமை ரோகநிதானமென்று சொல்லப் படுகிறது. இந்தரோகநிதானம் சாங்கிராமிகமென்னுந்தொற்றுநோய் களிலும், விஷதிருஷ்டிமுதலியவற்றிலும் எவ்வளவு பொருந்துமோ வென்பதை யோசிக்கவேண்டும். ஆயினும் தொற்றுநோய் முதலிய வற்றிலும் ரோகக்கிருமிமுதலியவற்றின் வளர்ச்சியால் வாத பித்த கப தாதுக்களாகிய சூக்ஷ்மபூதங்கள் தத்தம் நிலையினின்றும் ஏற் றத்தாழ்வடையக்கூடுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஆதலால் ரோக நிவிர்த்திசெய்யும் வைத்தியர்கள் ரோகசரீரத்துள்ள வாத பித்த கப தாதுக்களைத் தன்னிலையில் நிறுத்தவும், ரோகக்கிருமிகளை அடியோ டழிக்கவும் வேண்டிய சிகிச்சைமுறைகளைக் கைக்கொள்ளவேண்டு மென்பதைநினைந்தே ஆயுர்வேத ஔஷதங்கள் பெரும்பாலுங் கைப் புங் கார்ப்புமாகிய சுவையுள்ளனவாகச் செய்யப்படுகின்றன. இம் முறையில் ஔஷதங்களின் சுவைவீரியங்களால் ரோகக்கிருமிநாச மும் ஔஷததாதுக்களால் வாதாதி தாதுதோஷநிவர்த்தியும் உண்டா கலாமென்று தோன்றுகின்றது. இன்னும் தாந்திரிக சிகிச்சைகளி லும், ரச கந்தக பாஷாணாதிகளையுபயோகிப்பதால் அவற்றின் விஷாம் சங்களால் ரோகக்கிருமி நாசமும் தாதுவினம்சத்தால் வாதாதி தாது சமனமும் உண்டாகலாமென்று தோன்றுகின்றது.

இவ்விருவிதசிகிச்சைமுறைகளிலும் நம்மவர் வாதமுதலிய மூலதாதுக்களின் விஷமவேகமுதலிய தோஷங்களின் அளவை, நாடி நடையாலுணர்ந்து வைத்தியம் செய்துவந்திருக்கிறார்கள். வாத முதலிய தாதுக்களின் நிலைமையையறியுங் கருவிகளாகிய நாடிகளுக்கும் தாதுவெனப் பெயர்கொடுத்திருக்கிறார்கள்.

ஆகையால் சரீரப்பகுதிக் கேற்றவாறமைந்து தன்னிலையில்நின்று உடலைப் பாதுகாத்திருக்கும் வாதபித்தகபங்களைத் தோஷமென்னாது தாதுவென்றேசொல்லலாமென்றும், அவை மிக்கும் குறைந்தும் விஷமிக்குமியல்பையே தோஷமென்று சொல்லவேண்டுமென்றும் தோன்றுகின்றது. ஒவ்வொரு பொருளுக்கும் இருக்கவேண்டியவை குணமென்றும் இருக்கவேண்டாதவை தோஷமென்றும் வழங்கப் படுகின்றன.

வாததாதுவி னிருக்கவேண்டாத வேகபரிமாணாதிகளின் ஏற்றத் தாழ்வை வாததோஷமென்றும், பித்ததாதுவி னிருக்கவேண்டாத வேகபரிமாணாதிகளின் ஏற்றத்தாழ்வைப் பித்ததோஷமென்றும், சிலேத்துமதாதுவி னிருக்கவேண்டாத வேகபரிமாணாதிகளின் ஏற்றத்தாழ்வைச் சிலேத்துமதோஷமென்றும் பெயரிட்டு வழங்கிவந் திருக்கின்றனர்.

அங்ஙனம் வழங்கினராயினும் சோதிடர், அங்காரகதோஷம், ராகுதோஷம், புத்திரதோஷம், களத்திரதோஷம் முதலியதோஷங் களைக் கிரகநிலையாலுணர்ந்து சாந்திசெய்வதுபோலவே வைத்திய ரும் அதிருசியமாயுள்ள வாததோஷமுதலியவற்றை நாடிநடைமுத லியவற்றாலுணர்ந்து அவற்றின் பகுதியவாயநோய்களுக்குரியசிகிச் சைகளை நூலிற்சொல்லியபடி செய்துவருகிறார்கள்.

இக்கருத்தைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் மருந்து என் னு மதிகாரத்துள் "மிகினுங் குறையினு நோய்செய்யு" மென்னுங்

குறளுள் மெய்யுள், வளிமுதலாவுள்ளன மூன்றென்னுது, "நூலோர், வளிமுதலா வெண்ணிய மூன்" றென்று வெளியிட்டிருக்கின்றனர். ஆதலால், வாதபித்தகபங்கள் அதிருசியதத்துவமென்பதும், சளி முதலியதாதுக்கள் கபமுதலியவற்றின் காரியமென்பதும் முன்னோர் கொண்டகொள்கையென்பது நன்ருய்விளங்குகின்றது.

இவ்வாறு, அதிருசியதத்துவமாகக்கொள்ளப்பட்டவாதத்தை நரம்புவிசையென்றும், பித்தத்தை உதராக்கினிமுதலியவென்றும், சிலேத்துமத்தை நிணநீரென்றும் திருசியத்துவமாகக் காட்டியிருப்பது ஒருவாறு பொருத்தமுள்ளதாகவிருக்கிறது. ஆயினும் அவை அப் பூதகாரியங்களாயிருக்கவுங்கூடுமாதலால் அவையொழிய வேறில்லையென்பது இன்னும் ஆராய்ந்தறியவேண்டுமென்றுதோன்றுகின்றது.

மற்றும் சரீரதத்துவங்களுள் மனமென்பதும் அதிருசியத்துவங்களிலொன்ருய்ப் பலராலும் பலபடியாகக் கற்பிக்கப்பட்டதாயிருக்கிறது. அதனை ஆகாயகாரியமென்று கற்பித்திருப்பதும் ஒரு புதிய கொள்கையாகவேதோன்றுகிறது. இப்படி நாம் அதிருசியதத்துவங்களைப் புதிய புதிய கற்பனைகளுக்குள்ளாக்கி அபிப்பிராயபேதங்களைப் பெருக்குவதைக்குறைத்துக்கொண்டு இக்காலத்துக்கேற்ற அநுபவசித்தமாகும் பலவிஷயங்களையும் ஆராய்ந்து எழுதுதலை அதிகப்படுத்துவோமாளுல் அது உலகத்துக்கு மிகவும் பயன்படுமென்றுதோன்றுகிறது.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

# மதிப்புரை.

1. பன்னூற்றிரட்டு ஈகை மூலமுமுரையும்.—இது பன்னூற்றிரட்டென்னும் நீதிநூலினின்றும் சர்வகலாசாலையாரால் இண்டர் மீடியேட்பரீக்ஷைக்குப் பாடமாகவைக்கப்பட்ட ஈகையென்னும் அதிகாரத்துள்ள பாடல்களும், அவற்றிற்கு மதுரைக்காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்களாலெழுதப்பட்ட வுரையும் சேர்த்துப்பதிக்கப்பட்டிருக்கிறது.

இதில் மாணவர்கள் பரீக்ஷைவிஷயமாக அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய பலவும் விளக்கமாக எழுதப்பட்டிருத்தலால் அவர்க்கிப்புத்தகம் மிகவும் பயன்படத்தக்கதே. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஷை ம. கோபாலகிருஷ்ணையரவர்களிடம் பெறலாம்.

---

2. லோகமித்திரன்.—இது நாமக்கல் லோகமித்திரன் ஆபீஸிலிருந்து மாதந்தோறும் புத்தகரூபமாக வெளிவருமொரு தமிழ்ப் பத்திரிகை. இதில் பலரும்படித்தற்குரிய பலவிஷயங்களும் வெளியிடப்படுகின்றன. இப்பத்திரிகை 56 பக்கங்களுடையதாக உயர்ந்த கடிதத்திற் பதிப்பிக்கப்படுமெனவும், 1913ஹு ஜனவரிமீ தொடங்கி நடைபெறுகிறதெனவும், இதன் பத்திராதிபர் ஸ்ரீமத். எம். வி. கோவிந்தராஜையங்கார் எனவும் தெரிந்து சந்தோஷிக்கிறோம். இதன் வருடச்சந்தா ரூ 3—4—0 வேண்டுவோர் நாமக்கல் லோகமித்திரன் ஆபீஸுக்கு எழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

எனப் பெயர்ச்சொற்கள் பலவழியா லாக்கப்படுகின்றன. தமிழிற் பொன்னன், பொருப்பன், ஓணத்தான், கரியன் என்பனமுதலிய சிலவகைப்பெயர்களே படைக்கப்படுகின்றன.

வடமொழியிற் செயப்படுபொருட்பெயரடியாக வினைமுதல் வினைச்சொற்கள் தட்டில்லாமற் படைக்கப்படுகின்றன. உதாரணம்:— പടാ நெய்கிறான்—പടയതി; வடம் செய்கிறான்—வடயதி என்பன முதலியவாம். இவ்வாறு தமிழிற் சித்திரித்தான், கடைக்கணித்தான் எனச் சில வினைச்சொற்களே வழங்குவனவாம். அவைபோலப் படஞ் செய்தான் என்பது படித்தான் எனவும், குடஞ்செய்தான் என்பது குடித்தான் எனவும் வருதலின்று.

ஒருமொழிகளிலும் வடமொழியிற் சில പലം [ஊன்] ഫലം (கனி) ബലം (வலி) எனப் பலசொல்லாய் வெவ்வேறு பொருளுணர்த்தும்; தமிழில் அவையெல்லாம் பலம் என ஒரேசொல்லாய்விடும். வடமொழியில் "ഫലാഹാരം" என்பதைத் தமிழிற் பலவுணவு என்று மொழிபெயர்த்தால், பலவகையுணவா? மாம்ஸவுணவா? கனிவகையுணவா? ஆற்றலுண்டாக்குமுணவா? என ஐயப்படக்கிடக்கிறது. இதற்குக் காரணம் வடமொழிபோலத் தமிழில் எழுத்து மிகுதியின்மையென விளங்குகின்றது.

தமிழில் உயிரெழுத்துக்கள் குறில், நெடில், அளபெடை என மூவகைப்படும். வடமொழியில் அம்மூவகையும் உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என ஒன்பதாய் அவ்வொன்பதும் അനനുനാസികം, സാനുനാസികം என இரட்டித்து உயிரெழுத்துகளோரொன்று பதினெட்டுவகை யுச்சாரணபேதத்தோடு வழங்கப்படுகின்றன. மெய்யெழுத்தின்மிகுதி வெளிப்படையே.

தமிழில் ஓரெழுத்தொருமொழிகள் மிகக்குறைவாயுள்ளன. வடமொழியில் ஏகாக்ஷரநிகண்டு என்று ஓரெழுத்தொருமொழிகளுக்குத் தனியே ஒரு நிகண்டு எழுதப்பட்டிருக்கிறது. இதனால் அவை எவ்வளவு மிகுந்திருக்கவேண்டுமென்பதை ஊகிக்கலாம்.

வடமொழியில் ஓரெழுத்துமொழிகள் தொடர்மொழிகளை ஒருமொழியாக்க மிகவும் சாதகமாயிருக்கின்றன. இதற்குதாரணம்:—

தா என்பது கொடைப்பொருளுடையது. இதனால் தநத்தைக்கொடுப்பவன் தநத:, (குபேரன்) ஜலத்தைக்கொடுப்பது ஜலத: (மேகம்) ஸுகத்தைக்கொடுப்பது ஸுகதா, ஸௌக்யத்தைக்கொடுப்பது ஸௌக்யதா என எளிதிற் காரணவாக்கப்பெயர்கள் படைக்கப்படுகின்றன. மற்றும் ஜ என்பது பிறப்புணர்த்துவது. இதனால் பங்கஜம், வாரிஜம், நீரஜம், கஞ்ஜம், அம்புஜம், வநஜம், ஸரஸிஜம், ஸரோஜம், ஜலஜா எனக் காவியங்களில் மிகுதியாகவழங்கப்படுந் தாமரைக்குப் பலபெயர்களும், அண்டஜம் முதலிய பிறபெயர்களும் படைக்கப்பட்டிருக்கின்றன.

நாம் தமிழ்ச்செய்யுள்களுக்கும், நூலுக்கும் முதற்குறிப்பாற் பெயரிடுகின்றோம். அதுபோல வடமொழியிற் பொருள்களுக்கே அவற்றின் பெயரின் முதற்குறிப்பால் ஓரெழுத்தொருமொழிகள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இதனை ஓருதாரணத்திற்பார்க்கலாம். கூத்துக்குப் பெயரிடும்போதே அதனியல்புதோன்ற அதில் பாவ, ராக, தாளங்களமைந்திருப்பதுபற்றி அம்மூன்றின்பெயர் முதலெழுத்தால் பரதமெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

வடமொழியில் மொழிமுதலெழுத்திவையே யென்றும், மொழியிறுதியெழுத்திவையே யென்றும் நியமிக்கப்படவில்லை. ஏற்றபெற்றி வரலாம். இதனால் வேண்டியவாறு சொற்களைப் படைத்துக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. (தமிழில் இந்த நிர்ப்பந்தம் காலகதியிற் குறைந்துவருகிறது.)

'மந்த்ர' வாக்கியங்கள் 'கடபயாதி' சங்கேதத்தால் மிகச்சுருங்கிய சொற்களாற் சொல்லப்பட்டுள்ளன. வியாகரணசாஸ்திரத்தில் எழுத்துக்களைக்கொண்டே கருதியபொருளைக் குறிப்பாலுணர்த்தும் சங்கேதமொழிகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இதனைக் கம்பரே பின்பு "தெய்வப்பாடற் சொற்கலையென்னத் தெரிவாரும்" என மாஹேஸ்வர ஸூத்ர ஸங்கேதமொழிகளை நாயக நாயகிகளின் சங்கேதமொழிகளுக்கு உவமைகூறியவாற்றானும் உணரலாம். சில எண்கள் அவ்வெண்ணுடைப்பொருளின்பெயரால் வழங்கப்படுகின்றன. உதாரணம்:-பன்னிரண்டை ரவி என்னும் பெயராலும், இருபத்தேழை உடு என்னும் பெயராலும் வழங்குதல்போல்வன. இன்னோரன்ன பலவகை

நயங்க ளமைந்துகிடத்தலால், வடமொழி நூலியற்றற்கேற்ற வாற்ற லுடையதாயிருப்பதுபற்றி அதனைத் திண்ணியதெனக்கருதி, அத்துணை ஆற்றலில்லாத தமிழை நொய்தென்றார். ஆயினும் அவர் தமிழ்நாட்டிற்பிறந்த தமிழராதலால் தேசபாஷாபிமானமுடைய வராய்த் * தமிழின்பெருமையை வேண்டுமிடங்களில் விளங்கக்கூறி யும், தமிழில் உயர்ந்த காவியங்கள்செய்தும், தமிழுக்குவேண்டும் சில சீர்திருத்தக்கொள்கைகளைக் காட்டியும் தமிழுக்கு மிகப் பாடுபட்டிருக்கின்றனர்.

அவர் தமிழின்பெருமையைப்பற்றி "நீண்டதமிழாலுலகை நேமியினளந்தான்" எனவும், (அகத்—௩௬) "என்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான்" (அகத்—௪௭) எனவும், "உழக்குமறை நாலினு முயர்ந்துலகமோதும், வழக்கினுமதிக்கவியினும்மரபினுடி, நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கட், டழற்புரைசுடர்க்கடவுடந்ததமிழ்தந்தான்" எனவும் கூறியிருக்கின்றனர்.

இவற்றால், தமிழ் வடமொழியோடொப்ப அநாதியாயும் அநந்தமாயு முள்ளதென்றும், சிவபெருமானாலும் அகஸ்தியராலும் இலக்கண மமைக்கப்பட்டதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால், தமிழ் அநாதியாயிருப்பினும் பிரஸ்தாபத்துக்கு எட்டியமட்டில் முற்காலத்துக்கு வேண்டுமளவு சிவபெருமானாற் சீர்திருத்தம் செய்யப்பட்டதென்பதும், பின்பு காலாந்தரத்தில் அது போதாமையால் அக்காலத்துக்குவேண்டுமளவு அகத்தியமுனிவராற் றிருத்தப்பட்டிருக்கிறதென்பதும் ஊகிக்கப்படுதலால், தமிழ் அவ்வக்காலத்துக்கேற்ப வேண்டுமளவு சீர்திருத்தம் செய்யத்தக்கதென்பது கம்பர்க்கும் உடம்பாடென விளங்குகின்றது. திருத்தமுறையில், இச்செய்யுட்கண் நூல் செய்யத்தொடங்கினேன் என மூன்றுசொல்லானுணர்த்தப்படும் பொருளை நூற்கலுற்றேன் என ஒருசொல்லால் வழங்கும் ஒரு புதிய முறையும் காட்டிச் சென்றிருக்கின்றனர். இதனால் வடமொழிப் போக்கைப் பின்பற்றி, பொருளடக்கமுள்ளசொற்களைப் படைத்துக்கொண்டு தமிழை விருத்திசெய்யலாமென்பது கம்பர்கருத்தென விளங்குகின்றது.

---

*"பொன்னியைப்பொருவுங் கங்கை" (அகலி:—௩௨) என்றும் "காவிரிநாடன்ன கழனிநாடொரீ (குகப்—௧) என்றும் தேசாபிமானந்தோன்றக் கூறியிருத்தல் காண்க.

ஆகவே தமிழை நொய்தென்றது நூல்செய்தற்குதவுமாற்றலில் வடமொழியிற் குறைந்ததென்பதாம். இதனால் நூலியற்றற்குத் தாங்கொண்ட கருவியின் ஆற்றலின்மை கூறப்பட்டது. (கூறப்பட்டதாயினும் தாம் நூல்செய்துகாட்டினமையால் ஆற்றலுடையதாக்கிக் கொள்ளவேண்டுமென்பதும் தோற்றுகின்றது.)

இனிக்கருத்தாவாகிய தமதுவலியின்மை கூறுகின்றார், நொய்ய சொல் என்பதனால். தமிழினும் முற்றத்துறந்தமுனிவரா யிறைவனருள்பெற்று நூலியற்றிய ஆழ்வாராதிகள்சொற்களுள் "ஐஷீணாம வாசமாராதஆாஹாவாவதி" என வேண்டும்பொருள் தானே சென்றடைதலால் அவை இன்சொல்லாகும்; தமக் கவ்வியல்புமில்லை யென்பதுதோன்றத் தம்சொல்லை நொய்தென்கிறார்.

கருவியாகிய துணைவலியும் கருத்தாவாகிய தன்வலியுங் குறைந்திருப்பவும் முடிக்கக்கருதிய வினையின்வலி பெரிதாமென்பதுதோன்ற, நொய்தின் னொய்யசொல்லானுவன்றே னென்றது, நூற்கலுற்றேனென்றார்.

என்னே? என்னகாரியம்? அவிவேககாரியமென்பதாம். இன்னும் என்னே? என்னபிரயோஜனம், ஒருபயனு மில்லையென்பதாம். இன்னும் ஒலிவேறுபாட்டாற் றன்னைத்தானே வெறுத்துக்கொள்ளுதலுமாம். தன்னைத் தானே வெறுத்துக்கொள்ளுதலாற் பிறர்வெறுப்பர் என்பது சொல்லாமலே பெறப்படும்.

இவ்வாறு அவையடக்கங்கூறுமுகத்தானே முதனூலின் வரலாறு முதலிய பலவிஷயங்களைப்புலப்படுத்தும் கருத்துக்கள் பலவமைந்துகிடத்தல்காண்க. இதுபற்றியே ஓ ரபியுக்தர் இக்காவியத்தைக் கம்பசூத்திரமென்று வியந்திருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாம்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

# சோழன்செங்கணான்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

:(o):

'கோச்செங்கட்சோழநாயனார்' என்னும் பெயருடன் அறுபத்து மூன்றுநாயன்மார்களில் ஒருவனாக விளங்குகின்றவனும், சைவசமயாசாரியரில் ஒருவராகிய ஸ்ரீமத்-சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையில் 'தென்னவனாயுலகாண்டசெங்கணான்' என்று கூறப்படுகின்றவனும் இம்மன்னனேயாவன்.

இவ்வரசன், பூர்வஜன்மத்தில் ஒரு சிலந்திப்பூச்சியாயிருந்தனனென்றும், அப்பொழுது அப்பூச்சி திருவானைக்காவில் திருவெண்ணாவற்கீ ழமர்ந்திருந்த சிவபெருமான்மீது சூரியகிரணங்கள்படாவண்ணமும் சருகுகள் உதிராவண்ணமும் தன்வாய்நூலினாலே மேலேவலைகள்கட்டிப் பாதுகாக்குந் தொண்டுசெய்துவந்ததென்றும், அதே சிவலிங்கத்தை வழிபட்டுவந்த ஒரு யானை மேலே கட்டியுள்ள வலைகளை அநுசிதமென்று நாடோறும் சிதைத்துவர, இதனைப் பன்னாட்களாகச் சிலந்திகண்டு, பொறுது, தன்பணிவிடைகளை இரக்கமின்றி யழிக்கும் யானையின்மீதுசினந்து, அதன் துதிக்கையுட்புகுந்து நோவுண்டாக்க, யானை அதனைப் பொறுக்கமுடியாமல் தன் துதிக்கையைக் கீழேயறைந்து தன்னையும் தன்னுட்புகுந்திருந்த சிலந்தியையும் கொன்றதென்றும், இவ்வாறு மரணமடைந்த சிலந்தியே மறுஜன்மத்திற் செங்கணானாகப் பிறந்ததென்றும் பெரியபுராணம் கூறும். இதனை,

திருஞானசம்பந்தசுவாமிகள்-அரிசிற்கரைத்திருப்புத்தூர் 7-வது பாசுரம்

"சிலந்திசெங்கட்சோழனாகச்செய்தான்" என்றும்,

திருநாவுக்கரசுசுவாமிகள்—திருக்குறுக்கை 4.

"சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே" என்றும்,

சுந்தரமூர்த்திசுவாமிகள்—திருநின்றியூர் 1.

"திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ்சிலந்தியார்செய்தசெய்பணிகண்டு
மருவுகோச்செங்கணான்றனக்களித்தவார்த்தைகேட்டுநுன்மலரடியடைந்தேன்"

என்றும் நமது சமயாசாரியசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பாசுரங்களானும் நன்கறியலாம்.

இம்மன்னன் தனது தாய்வயிற்றிருந்து காலந்தாழ்த்துப் பிறந்தமையாற் சிவந்தகண்களை யுடையனாயிருந்தனன்; இவனை, செங்கணனென்று யாண்டும் வழங்கல் இக்காரணம்பற்றியே யென்க.

இம்மன்னனது இராஜதானிநகரமாகவிளங்கியது உறையூர்; இஃது அக்காலத்திற் பேராணுடையதோர் சிறந்தநகரமாயிருந்தது. பண்டைத்தமிழ்நூல்களிற் கோழியூர் என்று வழங்கப்படுவதும் இந்நகரமேயாம். இதன்காரணத்தை, "முற்காலத்து ஒரு கோழியானது யானையைப் போர்தொலைத்தலான் அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று"1 என்னும் அடியார்க்கு நல்லார்கட்டுரையானு முணர்க.

இம்மன்னர்பெருமான் புறநாட்டரசர்களைவென்று தன்னிராஜ்யத்தை விஸ்தீரணப்படுத்தவிரும்பி, வஞ்சிசூடி, சேரநாட்டின் அரசனாகிய சேரன்கணைக்காலிரும்பொறைமேற் சென்றனன்; இவர்கள் இருவர்க்கும் கழுமலம்2 என்னும் ஊரின்கண் ஒரு பெரும்போர் நடந்தது; அப்போரிற் சோழன்செங்கணன் வாகைமிலைந்ததுடன், சேரமானையும், அவன் இன்னுயிர்த்தோழரும் நல்லிசைப்புலவருமாகிய பொய்கையாரையும் பிடித்துக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிட்டிருந்தனன். பின்னர், ஆசிரியர் பொய்கையார் சோழன்செங்கணன்மீது 'களவழிநாற்பது3' என்னும் ஒரு செந்தமிழ்நூல்பாடிச் சேரமானைச் சிறைமீட்டினர். இதனை,

"களவழிக்கவிதைபொய்கையுரைசெய்யவுதியன்
காலவழித்தளையைவெட்டியரசிட்டவவனும்"4

என்னும் கலிங்கத்துப்பரணிச்செய்யுளானு முணர்க.

---

1 "முறஞ்செவிவாரணமுன்சமமுருக்கிய
புறஞ்சிறைவாரணம்—" என்பது சிலப்பதிகாரம். (பக்கம் 247, 248)

2 சீகாழி.

3 இந்நூல் கடைச்சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்று.

4 கலிங்கத்துப்பரணி—இராஜபாரம்பரியம் 18.

இனித் 'தென்னவனையுலகாண்டசெங்கணான்' என்னும் திருநாவலூரர் திருவாக்கை நுணுகியாராயுமிடத்து, இவன் பாண்டிநாட்டையும் ஜெயித்துத் தன்னாட்சிக் குட்படுத்தியிருக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது. மேற்கூறியதையே "மின்னாடு வேலேந்து விளைந்தவேளை விண்ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட-தென்னாடன் குடகொங்கன் சோழன்,"5 என்னும் திருமங்கையாழ்வார்வாக்கும் பின்னும் வலியுடைத்தாமாறுசெய்தலைக்காண்க. அன்றியும், இவனை, "தென்றமிழன்வடபுலக்கோன்சோழன்"6 என்று திருமங்கைமன்னன் புகழ்ந்துரைத்தமையால், இவன் வடநாடுகளையும் ஜெயித்து ஆட்சிபுரிந்தவனென்பது நன்குதெளியப்படும்.

இவ்வரசனைக் "கழன்மன்னர்மணிமுடிமேற்காகமேறத்,தெய்வவாள்வலங்கொண்டசோழன்"7 என்றும், "வெங்கண்மாகளிறுந்தி விண்ணியேற்ற விறன்மன்னர்திறலழியவெம்மாவுய்த்த-செங்கணான் கோச்சோழ"8னென்றும், "பாராளரவரிவரென்றழுந்தையேற்றப் படைமன்னருடல்துணியப்பரிமாவுய்த்த-தேராளன்கோச்சோழன்"9 என்றும் பன்முறை தம் பாசுரங்களில் திருமங்கையாழ்வார் புகழ்ந்தோதலானும், இவ்வரசர்பெருமானது போர்வீரமும் ஆண்மையும் நன்குவிளங்கும்.

இவ்வரசன் சிறந்தகல்விமான்; உலகநூல் முற்றக்கற்றுப் பலதுறைப்பயிற்சியு முடையனாயிருந்தனன். செந்தமிழ்ப்புலவர்களை மிக ஆதரித்துவந்த சோழமன்னர்களுள் இவனும் ஒருவன்.

இம்மன்னன் மிக்கசிவபக்தன்; இவன் அறுபான்மும்மைநாயன்மார்களில் ஒருவனென்றும், ஸ்ரீமத்-சுந்தரமூர்த்திசுவாமிகளால், திருத்தொண்டத்தொகையில் வணக்கங்கூறப்பெற்றவனென்றும் முன்னரே கூறியுள்ளேன். இதனால் இம்மன்னர்பெருமானது சிவபக்தியின்மாண்பு எத்தன்மைத்தென்பது நன் கறியக்கிடக்கின்றது.

5 ஸ்ரீ திருமங்கையாழ்வார்-பெரியதிருமொழி 6-ம்பத்து 6-வது அம்பரம் 6-வது பாசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ஷை | ஷை | ஷை | 5-வது |
| 7 | ஷை | ஷை | ஷை | 3-வது |
| 8 | ஷை | ஷை | ஷை | 4-வது |
| 9 | ஷை | ஷை | ஷை | 9-வது |

இவன் சைவசமயத்தில் மிக ஈடுபட்டவனேனும் வைணவத்திலும் அபிமானமுள்ளவனென்பது திருமங்கையாழ்வார் பாசுரங்களினால் அறியப்படுகிறது. சோழநாட்டில் அநேகசிவாலயங்கள் இவனால் எடுப்பிக்கப்பட்டுள்ளன. இதனை "எண்டோளீசர்க் கெழின்மாடமெழுபதுசெய்துலகமாண்ட, திருக்குலத்துவளச்சோழன்"10 என்னும் திருமங்கையாழ்வார்வாக்கானும்,

"மந்திரிகடமையேவிவள்ளல்கொடையனபாயன்
முந்தைவருங்குலமுதலோனுயமுதற்செங்கணான்
அந்தமில்சீர்ச்சோணாட்டிலகனுடுதொறுமணியார்
சந்திரசேகரனமருந்தானங்கள்பலசமைத்தான்"11

என்னும் பெரியபுராணச்செய்யுளானும் அறியலாம்.

நன்னிலம், திருஅம்பர், தண்டலைநீணெறி, திருவானைக்கா, வைகல் முதலானஸ்தலங்களில் எடுப்பித்த சிவாலயங்கள் இவனால் எடுப்பிக்கப்பட்டனவென்று தேவாரத்தினால் தெரிகிறது.

இனி, இவ்வரசனைப்பற்றிவழங்கும் ஒருசிறுகதை வரைகின்றேன்:—இவன் உறந்தையம்பதிக்கருகில் காவிரியில் நீராடுங்கால் தனதுமுத்தாரம் ஆற்றில்விழுந்து காணமற்போக, நீரினின்று அடிவணங்கி 'ஆனைக்காவுடையண்ணலே! தாங்கள் என் முத்தாரத்தை ஏற்றுக்கொள்வீர்களாக' என்றுவேண்ட, அம்முத்தாரமும் காவிரியினின்று கொண்டுபோகப்பட்ட திருமஞ்சனக்குடத்திலிருந்து திருவானைக்காவுடைய சிவபெருமான்மீது ஆரமாகவீழ்ந்து திகழ்ந்தது. இதனைச் செங்கணானும் ஏனையோரும் அறிந்து ஆச்சரியமுற்றனர். இவ்விஷயத்தை,

"தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலாகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதிமை"

என்னும் ஸ்ரீமத்-சுந்தரமூர்த்திசுவாமிகள்வாக்கானு முணர்க.

இவ்வரசனதுகாலம்:—இவனைச் சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தசுவாமிகள் தமதுபாசுரங்களிற் கூறியுள்ளாரென்பதை

10 திருமங்கையாழ்வார்-பெரியதிருமொழி-6-ம்பத்து 6-வதுஅம்பரம் 8-ம்பாசுரம்
11 பெரியபுராணம் கோச்செங்கட்சோழநாயனார்புராணம் 14 ஷை

முன்னரே தெரிவித்திருக்கிறேன். திருஞானசம்பந்தசுவாமிகள் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவரென்று காலஞ் சென்ற திருவனந்தபுரம் ப்ரொபஸர் சுந்தரம்பிள்ளையவர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து வரையறுத்திருக்கின்றனர். ஆகவே சோழன் செங்கணனும் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முன்னரேயிருந்திருக்க வேண்டும். கி. பி. 4-ம் நூற்றாண்டிற்குமேல் 10-ம் நூற்றாண்டு வரை பல்லவர்கள் என்னும் ஒரு பராக்கிரமமுடைய வம்சத்தரசர்கள் சார்வபௌமச்சக்கிரவர்த்திகளாய், காஞ்சீபுரம், மாமல்லபுரம் முதலிய இடங்களை இராஜதானிநகரமாகக்கொண்டு அரசாண்டுவந்தனரென்பதும், அக்காலங்களிற் சோழர்கள் தாழ்ந்தநிலைமையை யடைந்து பல்லவர்கட்குக் கீழிருந்தார்களென்பதும் சிலாசாசனவாராய்ச்சியால் தெரிகின்றன. புறநாடுகளையும் வென்று தன்னாட்சிக்குட்படுத்திச் சிறப்புடன் அரசுவீற்றிருந்த வளவர்பெருமானாகிய செங்கணன் தன்னிராஜ்யத்தைப் பல்லவர்கட் கிழந்து இக்காலத்துத் தாழ்ந்த நிலைமையிலிருந்தானென்று சொல்லற் கிடமில்லையாதலால் இவன் கி. பி. 4-ம் நூற்றாண்டிற்குமுன்னரே யிருந்திருக்கவேண்டும். ஆனாற் செங்கணன் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்த சோழன் கரிகாலனுக்குப்பிந்தியவனென்பது யாவருமறிந்தவிஷயம். கரிகாலனுக்குப்பின்னர் நான்குசோழமன்னர்கள் தொடர்ச்சியாய் ஆட்சிபுரிந்திருக்கின்றனர். ஒவ்வொருவனும் தனித்தனி ஆட்சிபுரிந்தகாலம் 25 வருஷமாக இதில் 100 வருஷங்கள் சென்றிருக்கவேண்டும். அதன் பிறகு சோழமன்னர்களைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லை. இதில் 50 வருடங்கள் சென்றிருக்கவேண்டும். பிறகு செங்கணனிருந்ததாகத் தெரிகிறது. ஆகையாற் சோழன்செங்கணன் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவனாதல்வேண்டும்.

இவ்வரசன்காலத்தில், தொண்டியென்னும் நகரின்கண் சேரமான் கோக்கோதைமார்பன் என்னும் ஓ ரரசனிருந்ததாகப் புறநானூற்றால் தெரிகிறது.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

---

# சாணக்கிய நீதிவெண்பா.

(கஉசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஶ்லோகம்

அவிஶ்ராமம் வஹேத்பாரம் ஶீதோஷ்ணம் ந விந்ததி ।
ஸஸந்தோஷஸ்ததா நித்யம் த்ரீணி ஶிக்ஷேத கர்த்தபாத் ॥

வெண்பா.

ஓய்வின்றிப் பார முவந்து சுமந்திடுதல்
காய்வின்றி யென்றுங் களிப்புறுதல்—தோய்குளிருஞ்
சீறும் வெயிலுந் தெரியாமை யென்றிவைகள்
கூறுங் கழுதையிடங் கொள்.

ஶ்லோகம்

கூடமைதுநசாரித்வம் காலே காலே ச ஸங்க்ரஹம் ।
அப்ரமத்தமவிஶ்வாஸம் பஞ்ச ஶிக்ஷேத வாயஸாத் ॥

வெண்பா.

சொல்லு மவதானஞ் சோம்பின்மை தான்மறைதல்
நல்லிரை தேடி நனிதிரட்டல்—சொல்லுமிவை
காக்கை யிடத்திருந்து கற்கப் படுங்குணமாம்
நோக்கி யறிக நனித்து.

ஶ்லோகம்

யுத்தஞ்ச ப்ராதருத்தானம் போஜனம் ஸஹ பந்துபி: ।
ஸ்த்ரியமாபத்கதாம் ரக்ஷேச்சது: ஶிக்ஷேத குக்குடாத் ॥

வெண்பா.

போர்த்தொழிலுங் காலைப் பொழுதிற் றுயிலெழலும்
ஆர்த்து வரும்பெடையை யாபத்திற்—காத்திடலும்
உண்டி கிளைசேர வுண்டிடலுங் கோழியிடங்
கண்டு பெறுங்குணங்கள் காண்.

ஶ்லோகம்

கோதிபார꞉ ஸமர்தாநாம் கிம் தூரம் வ்யவஸாயிநாம் ।
கோ விதேஶ꞉ ஸவித்யாநாம் க꞉ பர꞉ ப்ரியவாதிநாம் ॥

வெண்பா.

வாணிகர்க்குத் தூரமில்லை வல்லவர்க்குப் பாரமெனக்
காணுவ தொன்றில்லைக் கற்றவர்க்குப்—பேணியுற்ற
நாடெல்லாம் வேறன்று நல்வார்த்தை சொல்வோர்க்குக்
கூடுபகை யில்லையெனக் கூறு.

---

ஶ்லோகம்

ஆபதாம் கதித꞉ பந்தா இந்த்ரியாணாமஸம்யம꞉ ।
தஜ்ஜய꞉ ஸம்பதாம் மார்கோ யேநேஷ்டம் தேந கம்யதாம் ॥

வெண்பா.

ஐம்புலனிற் செல்லுதலே யாபத்துச் சேர்வழியாம்
ஐம்புலனிற் செல்லா தடங்குதலே—சம்பத்துச்
சேரும் வழியாகுஞ் சிறப்பெதுவென் றாராய்ந்து
சேர்க வொருவழியிற் சென்று.

---

ஶ்லோகம்

ந ச வித்யாஸமோ பந்து꞉ ந ச வ்யாதிஸமோ ரிபு꞉ ।
ந சாபத்யஸம꞉ ஸ்நேஹோ ந ச தைவாத்பரம் பலம் ॥

வெண்பா.

தொக்க பிணிபோலத் தோன்றும் பகையில்லை
மிக்ககல்வி போலுறவும் வேறில்லை—மக்களைப்போல்
வாய்ந்த பெருநட்பு மற்றில்லைத் தெய்வம்போல்
ஏய்ந்த பெரும்பெலமு மின்று.

---

ஶ்லோகம்

ஸஸ்யக்ஷேத்ராவரணா ஸீமா ப்ராகாராவரணம் க்ருஹம் ।
நரேந்த்ராவரணா தேஶா: சாரித்ராவரணா: ஸ்த்ரிய: ॥

வெண்பா.

நாட்டுக்குக் காவ னரபதியே பூமியெனு
மேட்டுக்குக் காவல் வியன்கடலே—வீட்டுக்குக்
காவல் புடைமதிலே காணுங்காற் கன்னியர்க்குக்
காவ லொழுக்கமே காண்.

---

ஶ்லோகம்

அஸந்துஷ்டா த்விஜா நஷ்டா: ஸந்துஷ்டா இவ பார்த்திவா: ।
ஸலஜ்ஜா கணிகா நஷ்டா நிர்லஜ்ஜாஶ்ச குலஸ்த்ரிய: ॥

வெண்பா.

நாணும் பொதுமகளு நாணக் குலமகளும்
பூணு மகிழ்ச்சியுறுப் பூசுரனும்—பேணுதலாற்
கூடு மகிழ்ச்சியுறுங் கோமகனு மிவ்வுலகிற்
கேடுறுவ ரென்றே கிளத்து.

---

ஶ்லோகம்

அவம்ஶபதிதோ ராஜா மூர்க்கபுத்ரோ ஹி பண்டித: ।
அதநேந தநம் ப்ராப்ய த்ருணவந் மந்யதே ஜகத் ॥

வெண்பா.

நற்குலத்திற் சேரா நரபதியு மூடனிடம்
உற்பவித்துப் பண்டிதனென் றுற்றவனும்—அற்பபணம்
நூதனமாய்ப் பெற்றவனு நொய்யதுரும் பென்றுலகை
ஏதும் பொருட்படுத்தா ரீண்டு.

---

### ஶ்லோகம்

ப்ரஹ்மஹாபி நர꞉ பூஜ்யோ யஸ்யாஸ்தி விபுலம் தநம் ।
ஶஶிநஸ்துல்யவம்ஶோபி நிர்தந꞉ பரிபூயதே ॥

### வெண்பா.

அந்தணனைக் கொன்றவனே யாயினுமென் செல்வனையே
வந்தனைசெய் தெல்லாரும் வாழ்த்துவரால்—முந்துகுலம்
வந்தவனே யாயினுமென் வாய்ந்தபண மில்லானை
நிந்தனைசெய் வாருறவு நீத்து.

---

### ஶ்லோகம்

புஸ்தகஸ்தா து யா வித்யா பரஹஸ்தகதம் தநம் ।
கார்யகாலே ஸமுத்பந்நே ந ஸா வித்யா ந தத்தநம் ॥

### வெண்பா.

பூண்டு மனம்வைத்துப் போற்றாது புத்தகத்திற்
காண்டலுற விட்ட கலையுணர்வும்—வேண்டலின்றி
மற்றொருவன் கைப்புகுந்த வான்பொருளுங் காரியங்கள்
உற்றபொழு தத்துத்வா வுற்று.

---

### ஶ்லோகம்

பாதபாநாம் பயம் வாதாத் பத்மாநாம் ஶிஶிராத்பயம் ।
பர்வதாநாம் பயம் வஜ்ராத் ஸாதூநாம் துர்ஜநாத்பயம் ॥

### வெண்பா.

வான்மருவுங் காற்றான் மரங்களுக்கும் வச்சிரத்தான்
மாமலைக்குந் தண்பனியால் வாவியுறுந்—தாமரைக்கும்
துர்ச்சனனாற் சற்சனர்க்குந் தொல்லுலகி லெப்பொழுதும்
அச்சமுள தென்றே யறி.

---

𑌶𑍍𑌲𑍋𑌕𑌂

𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍇𑌨𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌤𑍁𑌸𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌗𑍁𑌣𑌾𑌃 ।
𑌯𑌶𑌃𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌨𑌿𑌵𑌾𑌸𑌶𑍍𑌚𑌵𑌿𑌪𑍁𑌲𑌶𑍍𑌚𑌧𑌨𑌾𑌗𑌮𑌃 ॥

வெண்பா.

ஆய்ந்து பலநூ லறிந்தவனைத் தன்புடையில்
வாய்ந்த பணிசெய்ய வைத்திருக்கும்—வேந்தனிடம்
ஆன்ற பெருங்கீர்த்தி யான்றபொருள் வானுலகம்
மூன்றுமுறு மென்றே மொழி.

---

𑌶𑍍𑌲𑍋𑌕𑌂

𑌮𑍂𑌰𑍍𑌖𑍇𑌨𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌤𑍁𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑍋𑌷𑌾𑌮𑌹𑍀𑌪𑌤𑍇𑌃 ।
𑌅𑌯𑌶𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌨𑌾𑌶𑌶𑍍𑌚𑌨𑌰𑌕𑍇𑌗𑌮𑌨𑌂𑌤𑌥𑌾 ॥

வெண்பா.

முற்று மறிவில்லா மூடனென வெண்ணாது
மற்றவனைத் தன்றொழிலில் வைத்திருக்கும்—கொற்றவன்பால்
ஆன்ற பொருட்கே டவமானம் பாழ்நரகம்
மூன்றுமுறு மென்றே மொழி.

---

𑌶𑍍𑌲𑍋𑌕𑌂

𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌮𑍂𑌰𑍍𑌖𑌸𑌂𑌘𑌾𑌤𑍈𑌰𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌪𑌶𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ॥
𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌗𑍁𑌣𑌾𑌃𑌸𑌰𑍍𑌵𑍇𑌮𑍇𑌘𑍈𑌰𑌿𑌵𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌃 ॥

வெண்பா.

கோணுஞ் செயன்மூடர் கூட்டுறவா னல்லோர்கள்
பூணும் பெருங்குணங்கள் போய்மறையும்—சேணினுறும்
மாமுகிலால் விண்மேல் வருங்கதிரோன் றன்கிரணம்
போய்மறையுந் தன்மையது போன்று.

---

ஶ்லோகம்

யஸ்ய க்ஷேத்ரம் நதீதீரே பார்யா சாபி பரப்ரியா ।
புத்ரஸ்ய விநயோ நாஸ்தி ம்ருத்யுரேவ ந ஸம்ஶய꞉ ॥

வெண்பா.

வேற்றோர் மனைவிரும்பு மெல்லியலுஞ் சொற்கேட்டுப்
போற்றிப் பணிதலிலாப் புத்திரனும்—ஆற்றங்
கரைசேர் விளைநிலமுங் காணுங்கா லென்றும்
மாணத் துயர்கொடுக்கும் வந்து.

ஶ்லோகம்

ஸாதிக்ஷம் க்ருஷிகே நித்யம் நித்யம் ஸாவரோகிணி ।
பார்யாஸக்தோ சுப்ரியா யஸ்ய தஸ்ய நித்யோத்ஸவம் க்ருஹம் ।

வெண்பா.

ஏருழவர் வாழ்மனையி லென்றுமுண வுண்டுபிணிச்
சோர்வுறூர்க் கென்றுஞ் சுகமுண்டு—வாரநெறி
தாங்கு மனைவி தலைவன் மனையிலென்றும்
ஓங்கு பெருமகிழ்ச்சி யுண்டு.

ஶ்லோகம்

ஸௌபாக்ய ராஜகார்ய நாசாய பங்க்தி நாசாய நிர்தனம் ।
யாச்ஞா ந நாசாய குல நாசாய போஜனம் ॥

. வெண்பா.

யாசகத்தான் மானம்போம் யார்க்கு மிசைவற்ற
போசனத்தான் மேற்குலமும் போகுங்காண்—பேசுசெல்வம்
இன்மையாற் புத்திபோ மெச்செயலுஞ் சோம்புபெறுந்
தன்மையாற் போயொளிக்குந் தான்.

ஸ்லோகம்

𑌸𑍇𑌵𑌿𑌤𑌵𑍍𑌯𑍋𑌮𑌹𑌾𑌵𑍃𑌕𑍍𑌷𑌃𑌫𑌲𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌯𑌦𑌿𑌦𑍈𑌵𑌾𑌤𑍍𑌫𑌲𑌂𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌛𑌾𑌯𑌾𑌕𑍇𑌨𑌨𑌿𑌵𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 ॥

வெண்பா.

நன்னிழலு நற்கனியு நண்ணு மொருமரத்தைத்
துன்னி யணுகிற் சுகமுண்டு—மன்னுதெய்வம்
மேவுங் கனியை விலக்கிடினு மந்நிழலை
யாவர் தவிர்ப்பா ரியம்பு.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

---

# தேக ஆராய்ச்சி.

சேந்தமிழ் (தொகுதி கஉ பகுதி க.) 12-ம் பக்கத்தொடர்ச்சி.

---

இப்பிராணிகள் குடலில்மாத்திரமல்ல, தேகத்தின் மற்ற அம்சங்களிலும் பிரவேசிக்கின்றன. அவை இரத்தம் சர்மம் சுவாசகோசம் முதலியவையே.

இரத்தமானது தேகமுழுவதும் வியாபித்திருக்கும் அநேகமான நாடிகளின்வழியாய்ப் பிரவேசித்து ஒவ்வொருவிதமான தேக அணுக்களையும் போஷிப்பித்தபின் அவ்வணுக்களினின்றும் விடுபடுகிற அழுக்கு வஸ்துக்களை அல்லது விசர்ஜனங்களைச் சுமந்துகொண்டு மறுபடியும் ஹ்ருதயம்சென்று தன்னைச் சுத்தப்படுத்திக்கொள்வது தெரிந்தவிஷயமே. அதெங்ஙனமெனில்,

பூமியைச்சுற்றிக்கரையின்றிக் கடவுள்ஆக்ஞையால் நிலைநிற்கும் சமுத்திரமானது, சூரியவெப்பத்தினால் ஆவியாய்மாறி மேகமாய்ப் பிறகு மாரியாய் வருஷித்துப் பூமியெங்கும் வியாபித்திருக்கும் நால்வகையோனி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்குலக்ஷம்பேதங்க

ளாயுள்ள ஜீவகோடிகட்கெல்லாம் அவையவைகட்குத்தக்கபடி போ ஷணமளித்து, அவற்றினின்றும் விடுபடப்படும் மலமூத்திரமுதலிய விசர்ஜனங்களேயும் மற்றெவ்விதமான அழுக்குகளேயும் சுமந்து கொண்டு, சின்னீர்த்துளிகள்பெருகிச் சின்னீர்த்தாரையாகவும் சின் னீர்த்தாரை பெருநீர்த்தாரையாகவும் பெருநீர்த்தாரை சிறுவாய்க்கால் களாகவும் சிறுவாய்க்கால்கள் பெருவாய்க்கால்களாகவும் பெருவாய்க் கால்கள் அருவிகளாகவும் அருவிகள் ஓடைகளாகவும் ஓடைகள் நதிக ளாகவும் நதிகள் பெருநதிகளாகவும் பெருகி, யொன்றுசேர்ந்து மறு படியும் சாகரம்சேர்ந்து, அதனுடன்கலந்து, கதிரவனெதிர்சென்று, அவனதுகிரணங்களாற் சுத்தியாக்கப்பெற்று, மேகமாய்மாறிப் பிறகும் மாரியாய் வருஷித்துக்கொண்டிருப்பதுபோல, நா முட்கொள்ளும் போஜனபதார்த்தங்கள் இரைப்பையிற்சென்று ஜீர்ணீகரிக்கப்பெற்று, அவற்றின் சாராம்சங்கள் அணுப்பிரமாணமாய் அதிருசியமான சிறு நாடிகளிற்பிரவேசித்து, ஒன்றுசேர்ந்து, திருசியமான பெருங்கோசங் களில் நுழைந்து, பிறகு பெருநாடிகளிற் பிரவேசித்துப் பெருநதி யைப்போற் பெருகி, ஹ்ருதயமென்னும் சமுத்திரத்தில்வீழ்ந்து, அங் கிருக்கும் இரத்தத்துடன்கலந்து, வேறுநாடிகளின்வழியாய் நுரை யீரல்சென்றுபரவி, அங்குச் சுவாசகோசவழிகளாற்செல்லும் சூர்ய கிரணங்களேயொத்த வாயுவி னம்சங்களாற் சுத்திசெய்யப்பெற்று, மறுபடியும் ஹ்ருதயஞ்சென்று, பெரியஇரத்தநாடிவழியாய்ச் சிறிய இரத்தநாடிகளிற்சென்று, அவற்றின்வழியாய் அவற்றினும் சிறிது சிறிதாய்ப் பிறகு அணுப்பிரமாணமாய்ப் பிரிக்கப்பட்டுச் சரீரமெங் கும் வியாபித்திருக்கப்பட்ட இரத்தநாடிகளிற் பிரவேசித்துத் தேகமெங்கும் உள்ளும்புறம்பும் ஏற்பட்டிருக்கும் அவயவாதி களின் பரமாணுக்களின் உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் மூன்றவஸ்தைகட்கேற்ப அவைகட்குப் போஜனபதார்த்தங்களே யளித்து, அவற்றினின்றுவிடுபடும் விசர்ஜனவஸ்துக்களேச் சுமந்து சென்று, மேல்விவரித்தபடி நாமுட்கொள்ளும் போஜனர்சங்களேப்பரு கிச்செல்லும் நாடிகளுடன்கலந்து, மறுபடியும் ஹ்ருதயம்சென்று, நுரையீரலிற் சுத்தீகரிக்கப்படுகின்றது.

இத்தொழில், சர்வக்ஞனுகிய பராபரக்கடவுளின் ஆக்ஞையால் தேகத்துள், சதா நடந்தேறிவருகின்றது. இப்படி இவ் வணுப்

பிரமாணமான ஜீவிகளின் உற்பத்திக்கும் வாழ்க்கைக்கும் சென்று கொண்டிருக்கும் இரத்தத்தின்கதியும், அவைகளில் அழிந்துபோன வற்றைப் பருகிவரும் இரத்தத்தின்கதியும் மந்தமானவையென்று யோசிக்கவிடமில்லை. நமது ஒருகையைப்பரப்பி முலைக்கண்ணின் சமீபமாய் இடதுபக்கத்தின் மார்பின்மேல்வைத்துக் கவனிக்கில் யாதோ ஒருஜீவி நமதுமார்பினுளிருந்து மார்பின்பக்கத்தில் முட்டு வதாய்த் தெரிந்துகொள்ளலாம். இந்த ஜீவியே ஹ்ருதயம். இந்த ஹ்ருதயமானது சங்கீதசாஸ்திரத்தின் ஏகதாளத்தின் அக்ஷரகதி யைப்போல் ஒரேகாலகதியாய்ச் சிசு பால ஆரோக்ய வார்த்தக்ய மென் னும் தேகாவஸ்தைகட்கேற்ப அதிகதுரிதமாகவும், சமதுரிதமாகவும் துடித்துக்கொண்டிருக்கும். கர்ப்பவாஸகாலத்தில் ஒருநிமிஷத்தில் 150 முதல் 200 வரையும், ஜனனம்முதல் இரண்டுவருஷங்கள்வரை யில் 140 முதல் 110 வரையிலும், மூன்றுமுதல் ஐந்துவருஷங்களில் 110 முதல் 100 வரையும், 6 முதல் 14 வருஷங்கள் வரையில் 100 முதல் 86 வரையும் 14 முதல் 21 வருஷங்கள் வரையில் 86 முதல் 75 வரையும் பிறகு 75 முதல் 65 வரையும் துடித்துக்கொண்டிருக்கு மெனத் தெரிந்திருக்கிறோம். ஹ்ருதயம் எவ்வளவு அதிகமாகத் துடிக் கின்றதோ அவ்வளவு துரிதமாக இரத்தம் ஹ்ருதயத்தினின்று தேக பாகங்கட்கும் அவைகளினின்று ஹ்ருதயத்திற்கும் ஓடிக்கொண் டிருக்கின்றது.

சத்வகுணம் நிரம்பியுள்ள பரிசுத்தமனதின்கண் ரஜோகுணமும் தமோகுணமும் எப்படிவந்துசேர்ந்து ஆகாம்ய சஞ்சித பிராரப்தத் திற்குக் காரணமாய் ஜனனமரணதுன்பத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றனவோ அப்படிப்போலச் சதா முன்னும் பின்னும் ஓடிக் கொண்டிருக்கும் பரிசுத்த இரத்தத்தோடு தேகத்தின்புறம்பாயிருக் கும் பரமாணுப்பிராணிகள் வந்துசேர்ந்து, தேகத்திற்குப் பலவித வுபாதிகளையுண்டுபண்ணி, இடைவிடாத்துன்பத்திலாழ்த்தும் மார்க் கங்களிற் சிலவற்றைக் கூறத்தொடங்குவாம்.

(தொடரும்.)

V. S. அருணசலம்பிள்ளை,
S. A. S. Salem.

# துடிக்குறி.

ஒவ்வொருவரும் தத்தம்வாழ்நாளில் அனுபவிக்கும் இன்பதுன் பங்களைச் சோதிடசாத்திரத்தின்வலிமையினல் முன்னரே அறிந்து கொள்ளலாம்; இஃது நம்முன்னோர்கள்கொண்டமுறை யென்பது யாவரும் அறிந்தவிஷயம். அன்றியும் கண், தோள் மார்புமுதலிய உறுப்புகள் துடித்தலினுலும் பின்னர்ச்சம்பவிக்கும் சுகதுக்கங்களைத் தூலமாக அறிந்துகொள்ளலாம். இஃதும் நம்முன்னோர்கள் கொண்ட முறைகளில் ஒன்றென்பது யான் அடியில்வரையும் ஆராய்ச்சியால் நன்குவிளங்கும்.

இராவணனுற் சிறையிடப்பெற்று அசோகவனத்திருந்த சீதா பிராட்டி, ஆண்டு அருகேயிருந்த தாயினுமினியவளாம் திரிசடையை நோக்கி, "தூயைநீகேட்டியென் றுணைவியாமென — மேயதோர்கட் டுரை" பகர்ந்தனள். அக்கட்டுரையை ஈண்டு வரைகின்றேன்.

சுந்தரகாண்டம் காட்சிப்படலம் 32.

நலந்துடிக்கின்றதோநான்செய்தீவினைச்
சலந்துடித்தின்னமுந்தருவதுண்மையோ
பொலந்துடிமருங்குலாய்புருவங்கண்முதல்
வலந்துடிக்கின்றிலவருவதோர்கிலேன்.

இதன்கருத்து:—எனது கண் புருவம் முதலியன இடதுபக்கத் திற்றுடிக்கின்றன; இதனல் நன்மையுண்டாமோ அல்லது தீமையுண் டாமோ யான் அறிகின்றிலேனென்பதாம்.

சுந்தரகாண்டம் காட்சிப்படலம் 33.

முனியொடுமிதிலையின்முதல்வன்முந்துநாள்
துனியறுபுருவமுந்தோளுநாட்டமும்
இனியனதுடித்தனவீண்டுமாண்டென
நனிதுடிக்கின்றனவாய்ந்துநல்குவாய்.

இதன்கருத்து :—விசுவாமித்திரமுனிவருடன் இராமபிரான் என்னை மணம்புணர மிதிலைக் கெழுந்தருளியநாளில் என்னுடைய கண், தோள், மார்பு முதலியன எப்பக்கந் துடித்தனவோ அப்பக்கத் தீண்டுந் துடிக்கின்றன; இதன்பலனை ஆராய்ந்துகூறக்கடவாய் என்ப தாம்.

சுந்தரகாண்டம் காட்சிப்படலம் 34.

மறந்தனெனிதுவுமோர்மாற்றங்கேட்டியால்
அறந்தருசிந்தையென்னுவிநாயகன்
பிறந்தபார்முழுவதுந்தம்பியேபெறத்
துறந்துகான்புகுந்தநாள்வலந்துடித்ததே.

இதன்கருத்து :—என்னுருயிர்நாயகன் தனது இராஜ்யமுழுதுந் தம்பிக்களித்து நாடுதுறந்து காடுசென்றநாளில் என்கண்முதலியன வலப்பக்கத்திற்றுடித்தன என்பதாம்.

சுந்தரகாண்டம் காட்சிப்படலம் 35.

நஞ்சனையானவனத்திழைக்குநாளிடை
வஞ்சனையால்வலந்துடித்தவாய்மையால்
எஞ்சலவீண்டுதாமிடந்துடித்ததால்
அஞ்சலென்றிரங்குதற்கடுப்பதியாதென்றாள்.

இதன்கருத்து:—வனத்தின்கண் இராவணன் எனக்குத் தீங்கிழைத்தநாளில் என் கண்முதலியன வலப்பக்கத்திற் றுடித்தன; ஈண்டு இடத்திற் றுடித்தன; இதனால் எனக் குண்டாகும் நன்மை யாது என்றன ளென்பதாம்.

இவ்வண்ணம் சீதாபிராட்டியார் கூறிய கட்டுரையைச் செவிசாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்த திரிசடையென்னு மன்பினள் "உன்றுணைக்கணவனையுறுதலுண்மையால்," என்று அதன்பலனைத் தெரிந்துகூறினள்.

இதுகாறுஞ்செய்த ஆராய்ச்சியால் கண், தோள்முதலிய இடத்திற்றுடித்தால் நன்மையும் வலத்திற்றுடித்தால் தீமையுமுண்டாகுமென்பது அறியக்கிடக்கின்றது.

இனி, பாண்டுவின்மகனாகிய பார்த்தன், தன்புத்திரன் போரிலுயிர்துறந்ததையறியானாய், பாசறைக்குத் திரும்பிவருங்கால், கண்ணபிரானைநோக்கி "என்கணுந்தோளுமார்புமிடனுறத்துடிக்கைமாறு—நின்கணுமருவிசோரநின்றனையின்றுபோரிற்—புன்கணுற்றவர்கண்மற்றென்றுணைவரோபுதல்வர்தாமோ" என்று வினவினன். இதனாற் கண் தோள் முதலியன இடத்திற்றுடித்தால் தீமையும் வலத்திற்றுடித்தால் நன்மையுமுண்டாகுமென்பது அறியப்படுகிறது. ஆனால்

இம்முடிபு முன்னர்வரைந்துள்ளமுடிபுடன் பொருந்தாது முரணு கின்றதேயெனின், இம்முடிபு ஆண்பாலார்க்கும், முன்னர்வரைந் துள்ளமுடிபு பெண்பாலார்க்கு முரித்தாகலின் உண்மையில் முரணு தென்க. இதனால் ஆண்பாலார்க்குக் கண் தோள் முதலியன இடத் திற்றுடித்தால் தீமையும் வலத்திற்றுடித்தால் நன்மையு முண்டாகு மென்பதும் பெண்பாலார்க்கு இடத்திற்றுடித்தால் நன்மையும் வலத் திற்றுடித்தால் தீமையு முண்டாகுமென்பதும் நன்குவிளங்கும்.

அன்றியும், காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாநடந்தாளில் கோவலன்மனைவியாகிய கண்ணகிக்கு இடதுகண்ணும் அவன் காதற் பரத்தையாகிய மாதவிக்கு வலதுகண்ணும் துடித்தனவென்பதை,

சிலப்பதிகாரம்-இந்திரவிழவூரெடுத்தகாதை 236-240

"கண்ணகிகருங்கணுமாதவிசெங்கணு
முண்ணிறைகரந்தகத்தொளித்துநீருகுத்தன
வெண்ணுமுறையிடத்தினும்வலத்தினுந்துடித்தன
விண்ணவர்கோமான்விழவுநாளகத்தென"

என்னும் செய்யுளடிகளில் ஆசிரியர் இளங்கோவடிகளும் கூறிப்போந் தனர். அங்ஙனந் துடித்ததனாற் கண்ணகிக்குண்டாகிய நன்மையா வது தனது ஆருயிர்நாயகன் காதற்பரத்தையாகிய மாதவியைவிட் டகன்று தன்பாலடைந்தமையே; மாதவிக்குண்டாகிய தீமையாவது கோவலன் தன்னட்பையொழித்து அகன்றமையே.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

ஶ்ரீ:

# திருக்கோளூர்ச்சாசனங்கள்.

(உஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## சாசனம் VI.

சுவாமி வைத்தமாநிதியின் அர்த்தமண்டபம் வடபுறம் கீழைக்கோணப்பட்டியல் சரிவு வரி 3 தட்டை வரி 4.

காலம்:-கோவிராஜகேசரி குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு 36 ஆவது.

விஷயம்:—கோச்சடையபன்மரான உடையார் சோழபாண்டிய தேவரால் இறையிலியாக்கப்பட்ட மும்முடிச்சோழவிளாகம் இருவேலி விஷயமான ஓலை கறையான்பிடித்துப்போய்விட்டதால், ஷை குலோத்துங்கர்காலத்தில் ஷை ஓலையைப் புதுப்பித்தது. திருக்கோளூர் துஞ்சஊருடையான் பள்ளிகொண்டானும் பாஸ்கரன் மாசறு சோதியாலும் இவ்வூர் ஸ்வாமிக்கு ஷை நிலம் கைத்தடிசெய்து கொடுக்கப்பட்டது.

குறிப்பு:—இச்சாசனத்தால் இராஜராஜன், மும்முடிச்சோழன், உத்தமசோழன், கோச்சடிலவர்மஉடையார், ஸ்ரீ சோழபாண்டிய தேவர் முதலியவர்கள், கோவிராஜகேசரி குலோத்துங்கசோழ தேவற்கு முந்தியவர்கள் என்று தெரிகிறது. உடையார் சோழ பாண்டியதேவற்குப்பின் பாண்டிமண்டலம் குலோத்துங்கசோழருக்குக் கீழ்ப்பட்டுவிட்டது. இச்சாசனத்தால், தமிழர் சுலபமான கீழ்வாயிலக்கக்கணக்கால் எப்படி நிலங்களை அளந்துவந்தார்களென்றறிந்துகொள்ளலாம். உத்தேசம் நூறுவயல்கள் இருவேலி அளவு கொண்டனவாய் இருந்தன.

### மெய்க்கீர்த்தி.

(1) ——ங்க ஜயமாது—ம்ப, நிலமகள்நிலவ மலர்கள்புணர, உரிமையிற்சிறந்த மணிமுடிசூடி, மீனவர்நிலைகெட வில்லவர் குலைதர, ஏனமன்னவரிரியலுற்றழிதர, திக்கனைத்தும் தன் சக்கரம் நடாத்தி,

(உரைநடை) ஸ்ரீஸிம்ஹாஸநத்து அவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரி (தென்வடல் குறும்பட்டியல் கல்) திரிபுவனசக்கரவர்த்தி

(2) ——————தேவற்கு யாண்டு முப்பத்தாறுவது ராஜராஜ பாண்டிவளநாட்டு உத்தமசோழவளநாட்டு திருவழுதிவளநாட்டுத் திருக் கோளூர்ப்பள்ளிகொண்டருளின ஆழ்வாற்கு ஸ்ரீ கோச்சடையபன் மரான உடையார் ஸ்ரீ சோழபாண்டியதேவற்கு யாண்டு இருபத்து மூன்றுவது இவ்வூர்நிலத்தில் இறையிலியாக வரியிலிட்ட மும்முடி? சோழவிளாகம் நிலம் இருவேலியும் இவ்வூர் அஞ்ச

(3) ——(ஊருடையான்)பள்(?)ளிகொண்டானும் பாக்கரன் மாசறு சோதியும் நிலங்க கூடிக்குடுத்த கைத்தடிஓலை வைச்ச(வி)டத்தில் சித லரிக்க அந்தரப்பட்டமையில் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டுமுப்பத்தாறுவது இவ்வூர் அஞ்சஊருடையான் பள்ளிகொண்டான் தருப்பூலன்(?)வீரராஜேந்த்ரச்சிதொங்கப்பல்லவ ரை()யனும் விளத்தூருடையான் பாக்கரன் வரகுணனு

(4) ——வரையனும் நாராயணன் திருச்சக்கரமான அழகிய பாண்டியவிழுப்பரையனும் கருணாகரன்சேந்தபிரானான ஜயங்கொண் டசோழபாண்டியதிரையனும் இவனைவோமும் பள்ளிகோண்டருளின ஆழ்வார் அனுபவித்துவருகிற நிலம் இருவேலியும் தடித்தடி கைத் தடியெழுதியது:—வடக்கில் மற( )த்தி அறை தடி ஒன்று துலாம டக்குநீக்கி

(5) ——கயுமரை, இதன்மேற்கு இதன் மேலைத்தடி ஒன்றி னால் நிலம் காணிமுந்திரிகை, இடைகால்துடவல் தடி ஒன்றினால் நிலம் அரைக்காணிமுந்திரிகை, மலையனூர் பள்ளவறை தடி ஒன்றினால் நிலம்அரைமா, நயவீரப்பல்லவரையன் கடுக்கை அறை தடி ஒன்றி னால் நிலம் அரைமாஅரைக்காணி, இதன் தெற்குத் தடி ஒன்றினால் நிலம்அரை()ரக்காணிமுந்திரிகை, அச்சாணிவாக்கால் தடி

(6) ——முந்திரிகை, யிதன் தெற்கில் துடவல் தடி ஒன்றினால் நிலம் அரைக்காணி, ஏறன்வசக்கல் தடி ஒன்றினால் நிலம் மாகாணி அரைக்காணிமுந்திரிகை, யிதன்தெற்கில் சேந்திபிரான் தடி ஒன் றினால் நிலம் மாகாணி, சீகண்டன்பள்ளவறை தடி ஒன்றினால் நிலம்

அரைமா அரைக்காணிமுந்திரிகை, அதன்தெற்() கெட்டறை தடி ஒன்றினல் நிலம் அரைமா,

(7) ——மறத்திஅறை தடி ஒன்றினல் நிலம் முக்காணிமுந்திரிகை, கெட்டறைக்குக் கீழைத்தலை நில முந்திரிகை, பிரப்பங்குட்டத் தடி ஒன்றினல் நிலம் காணி, கொம்பன்செ(யி?) தடி இரண்டினல் நில மாகாணிஅரைக்காணி, இதன்மேலையி லுப்பையறை தடி ஒன்றினல் நிலம் அரைமாஅரைக்காணிமுந்திரிகை, இதன் () தெற்கில் பள்ள வறை தடி

(இதன்மேல்புறம் கற்கோட்டிற்குமேற்கே
தட்டையில் வரி 1, மேற்சரிவில் 4, நேர். 4.)

(1) ——இரண்டினல் நிலம் ஒருமாஅரைக்காணிமுந்திரிகை, இதன் மேலையி லுப்பைஅறை தடி ஒன்றினல் நிலம் அரைமாஅரைக்காணி, இதன்வடக்குத் தடி ஒன்றினல் கா()துலதுடவல் நிலங் காணிஅரைக் காணிமுந்(திரிகை)க, முருக்கந்துடவல் தடி ஒன்றினல் நிலம் அரை() மாமுந்திரிகை, இதன்தெற்கு மாவடித்துடவல் தடி ஒன்றினல் நிலங் காணிமுந்திரிகை, இதன்மேலைமாவடித்துடவல் தடி ஒன்றினல் நிலங் காணி

(2) ——அரைக்காணி, வரம்பெத்தான்பொறைத் தடி ஒன்றினல் நிலம் முக்காணி, கீழைக்கடுக்கையறை தடி ஒன்று நிலம் முக்காணி அரைக்காணிமுந்திரிகை, இதன் மேலைக்கடுக்கையறை தடி ஒன்று நிலம் முக்காணி, ஆலம்பாவறை தடி ஒன்று நிலம் ஒருமா, கோடல் தடி ஒன்று நிலம் அரைமாஅரைக்காணி (2)முந்திரிகை, வருக—துடவல் தடிஒன்று நிலம் அரைமாமுந்திரிகை,பாங்குநாட்டறை தடி ஒன்று நிலம் அரைமாஅரைக்காணிமுந்திரிகை, கீழ்காஙறை தடி ஒன்று

(3) . ——நிலம் முக்காணிமுந்திரிகை, இதன்வடக்கில் மருதறை தடி இரண்டு நிலம் முக்காணிஅரைக்காணிமுந்திரிகை, இதன்கிழக்கு பாங்குநாட்டறை தடிஒன்று நிலம் அரைமா, மருதறைவடக்குத் தடி ஒன்று நிலம் காணிஅரைக்(3)காணிமுந்திரிகை, இதன்கிழக்கு தடி ஒன்று நிலம் காணிஅரைக்()காணிமுந்திரிகை, இதன்வடக்கு வடகால் முன்னந்துவடல் தடி ஒன்று நிலம் காணி, இதன்கீழை தடி ஒன்று

(4) ——நிலங் காணி, இதன்கிழக்கு இராவணவறை தடி ஒன்று நிலம் அரைமாஅரைக்காணி, மாணிக்கவசக்கல் தடி ஒன்று துலா மடக்குநீக்கி நிலம் காணிஅரைக்காணிமுந்திரிகை, கேசவவிளாகம் துலாமடக்குநீக்கி தடிபல நிலம் முக்காணிஅரைக்காணிமுந்திரிகை, குலுங்காநிலைவசக்கல் வடக்கி()ல் வாய்க்காலின் வடதுலாமடக்கு நீக்கி தடி ஒன்று நிலங் கீழரை, இதன்மேற்கு துலாமடக்குநீக்கி தடி ஒன்று நிலம் முந்திரிகை, இதன்வடக்கு கடுக்கையறை துலாமடக்கு

(5) ——நீக்கி தடி ஒன்று நிலம் காணிக்கீழரை, இதன் வடக்கில் கடுக்கையறை துலாமடக்குநீக்கி தடி ஒன்று நிலம் அரைக்காணி, இதன் கீழைகடுக்கையறை துலாமடக்குநீக்கி தடி ஒன்று நிலங் காணி, கோடல் மேலைத்தடி ஒன்று நிலங் காணி, இடையன்செய்க் கறைத்தடி ஒன்று நிலம் முக்காணிஅரைக்()காணி, இதன் தெற்கு க.........ன்று நிலம் அரைக்காணிமுந்திரிகை, பெரும்புழுதியறை தடி ஒன்று நிலம் மாகாணிமுந்திரிகை, பறுகாட்டறை தடி ஒன்று நிலம் முக்காணிஅரைக்காணி

(செங்குத்துப்பட்டியல்)

(6) ——முந்திரிகை, இதன்வடக்கு தடி ஒன்று நிலம் காணிஅரைக் காணிமுந்திரிகை, இதன்வடக்கு மீசுண்ணி தடி ஒன்று நிலம் அரை மாஅரைக்காணிமுந்திரிகை, இதன்வடக்கு எககோல் (?) துடவல் தடி ஒன்று நிலம் அரைமாஅரைக்காணி, இதன்மே—ல எக்கோலத் துவடல் தடி இரண்டு நிலம் முக்காணிஅரை()ரக்காணி, இதன்மேலை... யறை தடி ஒன்று நிலம் அரைமாமுந்திரிகை, இதன்மேலை கண்ணப் பன்துடவல் தடி ஒன்று நிலம் காணிமுந்திரிகை, இதன்தெற்கில்

(7) —கண்ணப்பன்துடவல் தடி ஒன்று நிலம் அரைமாமுந்திரிகை, மாணிக்கவசக்கல் கீழைசாதனவசக்கல் துலாமடக்குநீக்கி தடி ஒன்று நிலங் காணிஅரைக்காணி, பிடாரன்வசக்கல் மேலைஏற்றறை துலாமடக்குநீக்கி தடி நாலு நிலம் முக்காணி; வடக்கில் அச்சாணி வாய்க்கால் ()தடி ஒன்று நிலம் அ(ரை)மாமுந்திரிகை, பூவியாபொ னில(?)மேலைதிருநந்தவனத்து மேலைவேலிக்குமேற்கு பாக்காதேவ வசக்கல் துலாமடக்குநீக்கி தடிபல

(8) ——நிலம் மாகாணி, வாசலறை மேலேஅரவிந்தலோசனவிளாகம் துலாமடக்குநீக்கி தடிபல நிலம் ஒருமாவரையரைக்காணி, வாசலறைக்குவடக்கு தடி இரண்டு நிலங் காணி, பட்டாலிவசக்கல் வடகிழக்கில் பள்ளிகோண்டான்வசக்கல் துலாமடக்குநீக்கி நில()ம் அரைமாஅரைக்காணியும், ஆரைகுளத்து மறுவாய்க்குவடக்கு அரிசனூலேயவசக்கல் துலாமடக்குநீக்கி தடிபல நிலம் ஒருமாவரை, ஆகநிலம் இருவேலி.

(9) ——இந்தநிலம் இருவேலியுங் காட்டிக்குடுத்த(தேன்?) திருக்கோளூர் துஞ்சலூருடையான் பள்ளிகொண்டாழ்வாருக்கு. இராசவிச்சாதிர சீதுங்கப்பல்லவரையன் எழுத்து. இந்நிலம் இருவேலியுங் காட்டிக்குடுத்து கைத்தடிசெய்துகுடுத்த விளத்தூருடையான் அரையன்வரகுண()ன விருதராசபயங்கரப்பல்லவரையன் எழுத்து. இந்நிலம் இருவேலியுங்காட்டி கைத்தடிசெய்துகுடுத்த கருணாகரன் சேந்தனான ()

(ஷ ஷ மத்தி நேர்பட்டியல் (2)
முந்தினது இதன்கீழிருக்கிறது)

(1) ——ஜயங்கொண்டசோழபாண்டியதரையன் எழுத்து. இப்படிக்குப் பள்ளிகொண்டான்சாத்தானான செய்பியன் திருக்கோளூர் கிழவன் எழுத்து. இந்நிலம் இருவேலியுங் காட்டிக்குடுத்து கை(த்) தடிசெய்துகுடுத்த நாராயணன் திருச்சக்கரமான

(2) ——அழகியபாண்டியவிழுப்பரையன் எழுத்து. இந்நிலம் இருவேலியுங் காட்டிக்குடுத்து கைத்தடிசெய்துகுடுத்த விளத்தூருடையான் அரையன் இராசேந்திரசோழன் எழுத்து. இப்படிக்கு இவர்கள்சொல்ல இக் கைத்தடி எழுதினேன் முத்தூற்கூற்றத்துகு(?)ணா

(3) —ருடையான் சதிரன் ஸ்ரீகூரஷனேன். இவை யென் எழுத்து.

A. M. சடகோபராமாநுஜாசார்யர்,
நேஷநல்ஹைஸ்கூல்,
திருச்சிராப்பள்ளி.

# செல்வநூல்.

# Economy.

(கசு௦-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## அத்யாயம் 9.

## செல்வவிபாகம்.

## (Distribution of Wealth.)

40. முதலாவது செல்வவிருத்தியைப்பற்றியும், இரண்டாவது செல்வபரிவர்த்தனையைப்பற்றியும் கூறப்பட்டது. இப்பொழுது செல்வத்தின் மூன்றாவது அம்சமாகிய செல்வவிபாகத்தைப்பற்றிக் கூறப்படும்.

41. செல்வமானது, வாரம் அல்லது வாடகை (Rent) கூலி, (Wages) லாபம் (Profits) என மூன்றுவகைப்படும். நிலம், தொழில், முதல் என்பவை செல்வவிருத்திக்கு முக்ய ஸாதனங்கள். நிலஸ்வான்தாருக்குக்கிடைக்கும்வருமானம், வாரம் அல்லது வாடகை என்றும், வேலைக்காரனுக்குக் கிடைப்பது கூலி என்றும், முதலாளிக்குக் கிடைப்பது லாபம் என்றும் பெயர்பெறும். ஆகையால், நிலத்துக்கு வாரமும், வேலைக்குக் கூலியும், முதலுக்கு லாபமும் செல்வவிபாகம் எனப்படும்.

42. மேற்கூறியவற்றில், இரண்டு மூன்று ஒருவனிடத்தேயிருக்கலாம். அல்லது ஒவ்வொன்றும் தனித்தனியே ஒவ்வொருவனிட மிருக்கலாம். நிலக்காரன், வேலைக்காரன், முதற்காரன் ஆகிய இம்மூவரும் வெவ்வேறுமனிதனுயிருக்கலாம். அல்லது நிலக்காரனே கூலிக்காரனுகவும், முதற்காரனுகவும் கூலிக்காரனே முதற்காரனுகவும் இருக்கலாம். நமது இந்தியாதேசம் ஸம்பந்தப்பட்டமட்டில் மேற்கூறியவாறு இரண்டுமூன்றுதன்மைகளும் வாய்ந்தவர் பலர்.

# அத்யாயம் 10.

## வாரம்.

## Rent of Land.

43. நிலத்தைப் பயிரிடும் குடியானவன், நிலஸ்வான்தாருக்கு ப்ரதிப்ரயோசனமாய்க் கொடுப்பதே வாரம் (Rent) எனப்படும். வீட்டுவாடகை யந்த்ரவாடகைமுதலான வாடகைகளும் இவ்வகுப்பைச் சேர்ந்தவை.

## சாசுவதக்குத்தகை.

## Permanent Lease.

44. சிலதேசங்களில் நிலக்காரருக்கும் குத்தகைக்காரருக்குமுள்ள பரஸ்பரஸம்பந்தமானது சாசுவதமாய் ஏற்பட்டிருக்கின்றது. ஜமீன்தார், நிலவிளைவிற் சிலபாகம் அல்லது குறிப்பிட்ட தீர்வை தான் வசூலிக்கமுடியும். ஒப்பந்தக்குத்தகையைச் சரியானபடி குடியினிடம் வசூலிப்பதுதவிர ஜமீன்தாருக்கு நிலத்தில் வேறு எவ்வித பாத்யமு மில்லை. இதுதான் சாசுவதக்குத்தகை அல்லது சாசுவதக் கவுல் என்று சொல்லப்படும்.

## சாதாரணக்குத்தகை.

## Ordinary Lease.

45. சரக்குகளைக் கொள்வன கொடுப்பனசெய்வதுபோலச் சாதாரணக்குத்தகையில் ப்ரியத்துக்குத்தக்கபடி, ஸ்வான்தார் இஷ்டமானவாரம் கேட்கலாம். உயர்ந்தகுத்தகை கொடுப்பவனுக்கே ஸ்வான்தார் தன் நிலத்தைஅடைப்பான். நல்லவரும்படி வரக்கூடிய நிலத்தையே குடியானவனும் பயிரிட விரும்பிவருவான்.

46. குடிப்ரியமானநிலங்கள். நிலங்களின் வளத்துக்கும் (Fertility) இடத்துக்கும் (Situation) தக்கபடி குடிப்ரியமும் குடிப்ரியத்துக்குத்தக்கபடி வாரமும் ஏற்படுகின்றன. மேற்கூறியபடி வளம் இடம் ஆகிய இரண்டில் ஒன்றுகுறைவானாலும், அதற்குத்தக்கபடி குடிப்ரியமும் குறையும். ஊருக்குப் பக்கத்திலிருந்தாலும் ஊஷர பூமிக்கு யாராவது குடியானவன் வருவானா? அதில் முதலையும்போட்டு

வேலையும்செய்வானு? அல்லது ஹிமயமலைக்கு வடக்கே மானஸஸரஸ் தீரத்தில் பொன்விளையுநாடு என்ற பேர்பெற்ற நல்லவளமுள்ள நிலங்களிருந்தாலும், அவ்விடம் போகவேண்டிய ரெயிற்பாதை, ரஸ்தாக்கள் அங்கு விளையும்பொருள்களை விற்கச் சந்தைகள் முதலான சௌகரியங்க ளில்லாவிட்டால், அவைகளைப் பயிர்செய்ய எந்தக் குடியானவன் விரும்புவான்? ஆகையால் வளமும் இடமும் குடிப்ரியத்துக்குமுக்யமானவை.

47. நிலப்ரியம் அல்லது நிலக்ராக்கி. சிலவிடங்களிற் சாகுபடிக்காரருக்கும், ஜனங்களுக்கும் வேண்டியவளவுக்குக் குறைவாகவே சாகுபடிநிலங்க ளிருக்கின்றன. அப்பொழுது வளக்குறைவான நிலத்துக்குக்கூட ப்ரியம்வந்துவிடுகின்றது. விளைபொருள்களை வாங்கத்தயாராயிருப்பவர் தொகைக்குத்தக்கபடி, எந்த நிலமானுலும் எவ்வளவு செலவானுலும் எவ்வளவு ச்ரமப்பட்டாயினும் பயிர்செய்யக் குடியானவர்களும் தயாராயிருப்பார்கள். அவ்வளவு ப்ரயாஸைக்குத்தக்கபடி விளைபொருள்களின்விலையும் உயர்ந்துவிடுகின்றது. இவ்வகை ப்ரியத்துக்குத்தக்கபடி மாமூலாய்ச் சாகுபடியாகும் நிலங்களுக்கு அதிகக்குத்தகையும், இதுவரை ஒன்றும் கிடையாத நிலங்களுக்கும் சொற்பதீர்வை அல்லது வாரமும் வர ஆரம்பிக்கின்றன. இவ்வாறுதான், ஜனத்தொகை மிகுந்தநாடுகளில், வரவரச் சாகுபடி நிலங்களின்விஸ்தீர்ணமும் அதிகரித்துவரும்.

48. வாரம். (Rent) ஒருநிலத்தைப் பயிரிடச் செல்லும் விவசாயச்செலவுக்கும், அந்தநிலத்தின் மொத்தவருமானத்துக்குமுள்ள வித்யாஸமே வாரம் (Rent) ஆகும். விவசாயவரைவையக் குறைக்கக்கூடிய காரணங்களெல்லாம் வாரத்தை உயர்த்தக் காரணங்களாகும்.

49. நிலக்காரருக்கும் மற்றவர்க்குமுள்ள பரஸ்பரவிரோதம். முதலாவது, ஜனப் பெருக்கத்துக்குத்தக்கபடி வாரமும் உயரும். அதாவது, நிலத்தில்விளையும் விளைபொருளை விலைக்குவாங்கி யுபயோகிப்பவர் அதிகரிக்க அதிகரிக்க நிலத்துக்கும் ப்ரியம் ஏற்படும். அப்பொழுது ப்ரியத்துக்குத்தக்கபடி நிலக்காரர் வாரத்தையும் உயர்த்துவார்கள்.

இரண்டாவது, நிலக்காரர்செல்வம் விருத்தியாவதற்குத்தக்கபடி மற்றவர்கள் ஏழைகளாகின்றார்கள். உதாரணம்:—இயற்கையாயுள்ள குத்தகைக்குமேற் கொடுக்கநேர்ந்தாற் குடியானவனுக்கு மிஞ்சுவது கொஞ்சந்தானே. உழுபவன் கணக்குப்பார்த்தால் உழவுதார்கூட மிஞ்சாது. இதேமாதிரி குடியானவர்கள் சிலராய், அதனால் நிலங்களுக்கு ப்ரியத்தாழ்வு ஏற்படுமானால், வாரமும் குறையும். அதனாற் குடியானவர்களுக்கு லாபமதிகரித்து, நிலக்காரருக்கு மேல்வார வரும்படி குறைந்துவரும்.

மூன்றாவது, உணவுப்பொருள்களின்விலையைக் குறைக்கச் செய்யும் ஏற்பாடுகளெல்லாம் நிலக்காரருக்கு நஷ்டமாகவும், மற்றவர்களுக்கு லாபமாகவும் இருக்கும். பஞ்சகாலத்திற் கலம்ஒன்றுக்கு 10 ரூ வீதம் விற்கலாமென்ற பேராசையால், நிலக்காரன் நெல்லைச் சேகரித்துவைத்திருக்கையில், திடீரென்று பர்மாவிலிருந்து கப்பல் கப்பலாய் அரிசி இறக்குமதியாய்விட்டால், உத்தேசித்தபடி கலம் 10 ரூ வீதம் விற்கமாட்டாது. அதனால் நிலக்காரருக்கு நஷ்டமும் மற்றவர்க்கு லாபமும் ஏற்படுகின்றது.

50. நிலக்காரர், முதற்காரர், கூலிக்காரர்களுக்குள்ள பரஸ்பரநன்மை. இம்மூன்றுவகுப்பினரும் ஒத்திருப்பது பரஸ்பரம் லாபகரமாகவே யிருக்கின்றது. நிலமும் கூலிகளு மிருந்து, விளையுங்காலம் வரை கூலிகளுக்குச் சம்பளமும், விவசாயச்செலவும் செய்ய முதலில்லாவிட்டால், அந்தநிலம் சாகுபடியாகமாட்டாது. அதேமாதிரி நிலமில்லாவிட்டால் முதலும், வேலைசெய்யக்கூலியு மிருந்துதான் என்னபயன். நிலமும் முதலு மிருந்தாலும் பாடுபடக் கூலிகளில்லாவிட்டாலும் பயனில்லை. ஆகையால், இடம், பொருள், ஏவல் என்ற இம்மூன்றும் நல்லநிலைமையி லிருப்பதுதான் பொதுச்செல்வ விருத்திக்கு அனுகூலமாகும்.

51. ஜனப்பெருக்கத்தைக்கொண்டு தேசக்ஷேமத்தை மதிக்க முடியாது. அதாவது நமதுதேசத்திற் சென்ற 1901-ம௵ ஜனக் கணக்கைவிட 1911-ம௵ ஜனக்கணக்கில், ஜனங்க ளதிகரித்திருந்தால், அப்பெருக்கத்தைக்கொண்டு முன்னைவிட இப்பொழுது இந்தியாதேசம் செல்வத்திலும், இதரசௌகரியங்களிலும் விருத்தியடைந்து க்ஷேமமாயிருப்பதாய்ச் சொல்லமுடியாது. சாகுபடிக்குத்

தகுதியான ஏராளமான நிலங்களும், செழிப்புமுள்ள ஆஸ்த்ரேலியா போன்ற தேசத்தில், ஜனப்பெருக்கத்தால் தேசக்ஷேமம் அதிகரித்திருப்பதாய்ச் சொல்லலாம். ஆனால் இந்தியாபோன்ற ஏழைத் தேசங்களில், ஜனங்கள் விருத்தியடைந்தபோதிலும், அதற்குத்தக்கபடி செல்வமும் சௌகரியங்களும் அதிகரிக்கவில்லை. தவிரவும், சௌகரியங்கள் குறைந்தும் வருகின்றன. பெரும்பான்மையோர் யாதொருபொருளும் சேர்த்துவைக்க மார்க்கமில்லாமல் அற்றைக் கூலிக்குழைத்துச் சீவித்துவருகிறார்கள்.

---

## அத்யாயம் 11.

### கூலி.

### Wages.

52. வேலைக்கு ப்ரதிப்ரயோசனமாய்க்கொடுப்பதே கூலி எனப்படும். முதலிலிருந்தே பொதுவாகக் கூலிகொடுக்கப்படும். ஆகையாற் கூலி என்பது சரக்குகளைச்செய்யும் செலவில் ஒருபாகமாகும்.

கூலி திட்டக்கூலி என்றும், போட்டிக்கூலி என்றும் இருவகைப்படும். வழக்கப்படி ஏற்பட்டுள்ள கூலியே திட்டக்கூலி (அல்லது Wages by custom) எனப்படும். க்ஷவரகனுக்கு 2 அணா திட்டக்கூலியாகும். அப்படிக்கல்லாது, காலதேசவர்த்தமானங்களுக்கும், வேலைக்கும், வேலைக்காரருக்கும் தக்கபடி போட்டிமேல் ஏற்படுவதே போட்டிக்கூலி (Competition) எனப்படும். வேலைக்குத்தக்க கூலிக்காரர் கிடைப்பதரிதானால், அவ்வருமைக்குத்தக்கபடி கூலியும் அதிகரிக்கும். கூலிக்காரருக்குவேண்டிய வேலைகிடைப்ப தரிதானால், அவ்வருமைக்குத்தக்கபடி கூலியும் குறையும்.

53. வேலைத்திறம். வேலைக்காரரின் திறமையைப்பொருத்தே கூலி நிர்ணயிக்கப்படும். யூகமாயும் இனமாயும் செய்யக்கூடிய ஒரு கொத்தன்செய்யும்வேலையை அதேகாலத்தில், யூகமில்லாதவர் 10 பேர்கூடச் செய்யமுடியாது. செய்தவேலையும் பாழ். முதலும் நஷ்டமாய்விடும். ஆதலால் இனஸ்தன், வேலைதெரியாதவனைவிட அதிகக் கூலிகேட்பது இயற்கையே. கடைசியிற் பார்த்தால், அதிகக்கூலி கொடுத்து இனஸ்தனிடம் வேலை வாங்குவதே லாபகரமாய் முடியும்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

---

# மதிப்புரை.

---

1. மனோன்மணி:—இது, மதுரை ஸெயிண்ட்மேரி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும், திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனவித்வானும் ஆகிய ஸ்ரீமத்-மு. கோவிந்தஸாமிஐயரவர்களா லியற்றப்பெற்றதொரு புனைகதை. இக்கதையானது, கற்பினும் பொற்பினுஞ்சிறந்த நாயக நாயகிகளையுடையதாயும், கல்வி, இராஜபக்திமுதலிய பல அரியவிஷயங்களை விளக்கி எழுதிய இனியநடையுடையதாயும், இடையிடையே சந்தர்ப்பத்திற்கேற்ற பழையவும் புதியவுமான செய்யுள்கள் சேர்க்கப்பெற்றதாயும் இருக்கிறது. மதுரை "வித்தியாபாநு"ப்பத்திராதிபர் எழுதிய முகவுரையுடன்கூடியது. இதன்விலை அணு—12.

---

2. காதலி:—இது, ஞானகாந்தி, குசாவதி, மதிமாலினி முதலிய புனைகதைகள் எழுதிய மகா-ள-ள-ஸ்ரீ-செ. இராஜுசெட்டியார் எம். பி. பி. ஐ., அவர்களால் இயற்றப்பட்டதொரு புனைகதை. மகா-ள-ள-ஸ்ரீ சரபம், உ. முத்துஸாமிக்கவிராயரவர்கள்பாயிரத்துடன் உயர்ந்தகடிதத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன்விலை அணு—12.

மேற்கண்ட புத்தகங்கள் வேண்டுவோர் அதனதன் ஆசிரியர்க்கெழுதிப் பெற்றுக்கொள்க.

குறிப்பு:—மேற்கண்ட புத்தகங்களிரண்டும் பாண்டியன்புத்தகசாலையிற் சேர்ப்பிக்கப்பெற்றன.

---

புத்திராதிபர்.